பக்கங்கள் : பன்னிரண்டு

# உதயன்

Registered as a

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 ஆவணி 09 ஞாயிற்றுக்கிழமை (26.08.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 271

# வடக்கு - கிழக்கு தமிழர் அவலம்;
# நாடாளுமன்றில் முழுநாள் விவாதம்

## அடுத்த மாதம் ஐந்தாம் திகதியன்று

கொழும்பு,ஓகஸ்ட் 26

வடக்கு - கிழக்கு வாழ் தமிழர்கள் படும் அவலங்கள், எதிர்நோக்கும் அடக்குமுறைகள், ஆபத்துகள் குறித்து நாடாளுமன்றத்தில் முழு நாள் விவாதம் நடத்துவதற்கு ஏற்பாடாகியுள்ளது.

இந்த விவாதத்தை எதிர்வரும் ஐந்தாம் திகதி புதன்கிழமை நடத்துவதற்கு அனைத்துக் கட்சிகளும் இணக்கம் தெரிவித்துள்ளன.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் கட்டுப்பாடின்றி, தங்கு தடையின்றி, கங்கு கணக்கின்றி நடைபெறும் படுகொலைகள், ஆள் கடத்தல்கள் குறித்து விவாதத்தின் போது முக்கிய இடம் கொடுக்கப்படும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த வியாழக்கிழமை நாடாளுமன்ற கட்டடத்தில் நடைபெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் மேற்படி விவாதம் தொடர்பாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அனுமதி கோரியது. விவாதத்தை நடத்துவதற்கு சகல கட்சிகளும் இணக்கம் தெரிவித்துள்ளன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் தொடரும் படுகொலைகள், கடத்தல்கள் தொடர்பாக இந்த விவாதத்தில் முக்கியமாக வெளிப்படுத்தப்படும். உண்மை நிலை அம்பலப்படுத்தப்படும் என்று கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்

(12ஆம் பக்கம் பார்க்க)

## தீர்வுத் திட்டத்தை தயாரிப்பதற்கு பிரதமர் தலைமையில் புதிய குழு

கொழும்பு,ஓக.26

இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டத்தைத் தயாரிப்பதற்காக பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க தலைமையில் புதிய குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

தற்சமயம் செயற்படும் அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தலைமையிலான அனைத்துக் கட்சிகளின் தெரிவுக்குழுவுக்கு புறம்பாக இக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

பிரதமர் தலைமையிலான குழுவில் அனைத்துக் கட்சிகளின் தலைவர்களும் இடம்பெறுவர்.

அரசியல் கட்சிகளுக்கு இடையில் உருவாகியுள்ள முரண்பாடுகளை நீக்கி தீர்வுத் திட்டத்தை தயாரிப்பதே இக்குழுவின் நோக்கம் எனத் தெரிவிக்கப்பட்டது.

பிரதமர் தலைமையிலான குழுவில் இடம்பெற ஜாதிக ஹெல உறுமய விருப்பம் தெரிவித்துள்ளது.

(அ-1)

## அனைத்துக் கட்சித் தெரிவுக்குழுவின் கூட்டங்கள் யாவும் இடைநிறுத்தம்!

கொழும்பு,ஓக.26

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் யோசனைகளைக் கண்டறிவதற்காக நியமிக்கப்பட்ட அனைத்துக் கட்சித் தெரிவுக் குழுவின் அமர்வுகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இக்குழுவினால் இதுவரை கண்டறியப்பட்ட விடயங்களுக்கான இணக்கப்பாட்டை சகல கட்சித் தலைவர்களிடம் ஜனாதிபதி ஏற்படுத்திய பின்பே அனைத்துக் கட்சிகளின் தெரிவுக்குழு கூட்டப்படும்.

அனைத்துக் கட்சிகளின் தெரிவுக் குழுவின் தலைவரும் அமைச்சருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண இதனைத் தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் யோசனைகளைக் கண்டறிய ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட அனைத்துக்கட்சிகளின் தெரிவுக்குழு 40 இற்கு மேற்பட்ட தடவைகள் கூடியுள்ளது.

தீர்வுயோசனைகள் தொடர்பான இறுதி ஆவணத்தைத் தயாரிப்பதற்கு ஆலோசனைகள் முன்வைக்கப்பட்ட நிலையில் ஜே.வி.பி.,மக்கள் ஐக்கிய முன்னணி, ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகளிடமிருந்து எதிர்ப்புக் கிளம்பியுள்ளது.

இறுதி ஆவணத்தைத் தயாரிப்பதற்கு முன்னர் கட்சித் தலைவர்களுடன் ஜனாதிபதி பேசவேண்டும் என அக்கட்சிகள் கோருகின்றன.

அக்கட்சிகளின் கோரிக்கைப் பிரகாரம் கட்சித் தலைவர்களுடன் ஜனாதிபதி பேச்சு நடத்தி இணக்கப்பாடு காணாத நிலையில் தெரிவுக் குழுவை மீண்டும் மீண்டும் கூட்டுவதில் எவ்வித பயனும் இல்லை.

(12ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையின் விமர்சனங்களுக்கு எதிராக ஐ.நா. குரல் கொடுக்காதது ஏன்?

### இவ்வாறு கேள்வி எழுப்புகிறார் இளந்திரையன்

கிளிநொச்சி,ஓக.26

இலங்கை அரசு மோசமான விமர்சனங்களை வெளியிட்ட பின்னரும் ஐ.நா. அமைதி காத்தது ஏன்? - என்று விடுதலைப் புலிகளின் இராணுவப் பேச்சாளர் இ.இளந்திரையன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட ஐ.நாவின் மனிதாபிமான விவகாரங்களுக்கான பிரதிச் செயலாளர் ஜோன் ஹோம்ஸ் வெளியிட்ட கருத்துத் தொடர்பாக இலங்கை அரசு அவரை கடுமையாக விமர்சித்திருந்தது தெரிந்ததே.

தமிழீழத் தேசியத் தொலைக்காட்சியில் ஒளிபரப்பான 'நிலைவரம்' நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையில்

(12ஆம் பக்கம் பார்க்க)

### இவ்வருடத்தின் முதல் அரை ஆண்டில்

## படுகொலை செய்யப்பட்டோர், கடத்தப்பட்டவர்களில் மிக அதிகமானோர் தமிழர்களே!

### அவர்களில் கூடுதலானோர் குடாநாட்டினர்!!

கொழும்பு, ஓக. 26

* இந்த ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் - ஜனவரி தொடக்கம் ஜூன் வரை - நடைபெற்ற படுகொலைகளில் 70.7 சதவீதமான தமிழர்கள் உயிரிழந்துள்ளனர்.

* மாவட்ட ரீதியாக நோக்கும்போது யாழ்ப்பாணத்திலேயே மிக அதிக வீதத்தினர் - 23.2 சதவீதத்தினர் - கொலையுண்டனர்.

* கடத்தப்பட்டும் காணாமற்போயுள்ளவர்களிலும் தமிழர்களே அதிக எண்ணிக்கையினர். மொத்தமாக 64.6 சதவீதமானோர் கடத்தப்பட்டும் காணாமலும் போயுள்ளனர்.

காணாமற்போனோரைக் கண்டறியும் ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு நேற்றுச் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை ஒன்றில் இந்த விவரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

சட்டம் மற்றும் சமூகநிதியம், மக்கள் கண்காணிப்புக்குழு, சுதந்திர ஊடக அமைப்பு ஆகியன கூட்டாகத் தமது அறிக்கையைக் கையளித்திருந்தன. அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட விவரங்கள் வருமாறு:

2007ஆம் ஆண்டின் ஆறுமாத காலப்பகுதியில் இலங்கையில் 547பேர் கொல்லப்பட்டும் 396பேர்காணாமற்போயும் உள்ள னர்.

நாடளாவிய ரீதியில் 70.7 சதவீத தமிழர்களும், 19.1 சதவீத சிங்களவர்களும், 5.9 சதவீத முஸ்லிம்களும் கொல்லப்பட்டுள்ளனர். இதில் 89.9 சதவீத ஆண்களும் 9.7 சதவீத பெண்களும் அடங்குவர்.

கொலைகளைப் பொறுத்தவரையில் யாழ்ப்பாணமே மிகவும் பாதிக்கப்பட்ட பிரதேசமாக உள்ளது.

அங்கு 23.2 சதவீதமானோர் கொல்லப்பட்டுள்ளனர். மட்டக்களப்பில் 21.5 சதவீதமானோரும் வவுனியாவில் 21.3 சதவீதமானோரும் கொல்லப்பட்டுள்ளனர். திருகோணமலைப் பிரதேசத்தில் அதிகமாக சிங்களவர்களும், முஸ்லிம்களும் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## அரிசி, பருப்பு, கோதுமை மா உண்டு; ஆனால் சமைப்பதற்கு விறகு இல்லை

### அவலப்படுகிறார்கள் மட்டக்களப்பு அகதிகள்

மட்டக்களப்பு,ஓக.26

நிவாரணமாக வழங்கப்படும் அரிசி, பருப்பு, கோதுமை மா, சீனி என்பன கிடைக்கின்றன. ஆனால் விறகு இல்லை. உப உணவுப் பொருள்களும் இல்லை!

அதனால் தமது பசியைப் போக்கமுடியாத பரிதாபமான நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள் சுமார் 42 ஆயிரத்து 500 பேர்!!

இவர்கள் திருகோணமலை மாவட்டம் மூதூர் கிழக்கு, சம்பூர், பகுதிகளிலிருந்தும், மட்டக்களப்பு வாகரை மற்றும் கதிரவெளி ஆகிய இடங்களில் இருந்தும் இடம்பெயர்ந்து வந்து மட்டக்களப்பு நகரப் பகுதியில் தங்கியுள்ள தமிழ் மக்கள் ஆவர்.

சுமார் ஒன்றரை வருடங்களாக அதிகளாக இங்கு வாழ்ந்து வரும் இவர்கள் தமக்கு இனி யார் உதவுவார்கள் என்று அந்தரித்து நிற்கிறார்கள்.

சென்ற வருடம் மார்ச் மாதத்தில் இருந்து மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் இருந்து இடம்பெயர்ந்து வந்தவர்கள் மட்டக்களப்பு நகரத்தில் 41 நலன்புரி நிலையங்களிலும் உறவினர் மற்றும் நண்பர்கள் வீடுகளிலுமாக சுமார் 11 ஆயிரத்து 500 குடும்பங்களைச் சேர்ந்த 42 ஆயிரத்து 500 பேர் தங்கியுள்ளனர்.

இவர்களுக்கு உலக உணவுத் திட்ட நிறுவனம் தொடர்ந்து அரிசி, சீனி, பருப்பு, கோதுமை மா, மரக்கறி எண்ணெய் ஆகிய ஐந்து பொருள்களை வழங்கி வருகின்றது.

இந்தப் பொருள்களைக் கொண்டு (12ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை வரும் உத்தேசம் இல்லை என்கிறார் எரிக்

ஒஸ்லோ,ஓக.26

இலங்கைக்கு அண்மையில் செல்லும் உத்தேசம் எதுவும் இல்லை என்று நோர்வே சர்வதேச விவகார அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்தார்.

இலங்கையில் நிலைமை மோசமாகி வருகின்றது. எனவே சமாதான முயற்சிகளை மேற்கொண்டு அங்கு செல்வீர்களா எனக் கேட்டதற்கு அவர் இப்படிப் பதிலளித்தார்.

கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் 28ஆம், 29ஆம் திகதிகளில் ஜெனீவாவில் நடந்த பேச்சுக்களின் பின்னர் நோர்வேயின் சமாதான முயற்சிகள் முடங்கியிருப்பது தெரிந்ததே.

(அ-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## மகிழ்வுடன் வாழ்த்துகின்றோம்

சாவகச்சேரி, சிவன் கோயில் வீதியில் அமைந்துள்ள தென்மராட்சிக் கலை மன்ற கலாசார மண்டபத்தில் நாயன் மார்க்கட்டைச் சேர்ந்த திருமதி கெ.சோதிநாதன் அவர்களின் புத்திரன் திருநிறை செல்வன்

**பிரதீபன்** அவர்களும்

நுணாவில் மத்தியைச் சேர்ந்த திரு. திருமதி சரவணபவன் தம்பதியரின் புத்திரி திருநிறை செல்வி

**பாமினி** அவர்களும்

இன்று (26.08.2007) ஞாயிற்றுக்கிழமை திருமாங்கல்ய தாரணம் செய்து இல்லறமாம் நல்லறத்தில் இணைந்து பதினாறு செல்வங்களும் பெற்று, சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வளமுடன் வாழ இறையருள் வேண்டி தென்மராட்சிக் கலைமன்ற நிர்வாக சபையினர் வாழ்த்துகின்றோம்.

குறிப்பு: திருமண வைபவம், பூப்புனித நீராட்டுவிழா, நடன அரங்கேற்றம் மற்றும் கலை கலாசார நிகழ்வு வைபவங்களுக்கு இந்த மண்டபத்தை தென்மராட்சிக் கலைநிர்வாக சபையுடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ள முடியும் என்பதை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

நிர்வாக சபை,
தென்மராட்சிக் கலைமன்றம்,
சிவன் கோயில் வீதி, சாவகச்சேரி.

**அனுசரணையாளர்கள்:**

* மில்டன் வீடியோ, கச்சாய் வீதி, சாவகச்சேரி.
* ஜெகா எலெக்ரோனிக், தனங்களப்பு வீதி, சாவகச்சேரி.
* S.K. ரெஸ்ரோறன்ஸ், கண்டிவீதி, சாவகச்சேரி.
* சண்முகம் அன் சன்ஸ், கண்டிவீதி, சாவகச்சேரி.

(சி-53458)

## திறப்பு விழா அழைப்பு

அபிதா மரத்தொழிற்சாலையின் கிளை நிறுவனமாக நாளை (27.08.2007) திங்கட்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் 10 மணிவரை உள்ள சுபவேளையில் எம்மால் புதிதாக அமைக்கப்பெற்ற

**"பிரசாந் மரஅரிவு ஆலை"**

என்னும் நிறுவனத்தைத் திறப்பதற்கு இறைவன் திருவருள் கொண்டுள்ளதால் அத்தருணம் தாங்களும் இவ்விழாவில் கலந்து சிறப்பிக்கும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

(கொண்டாட்டம் இரு நாள்கள் நடைபெறும்)

காளி அம்மன் கோயில் வீதி,
நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்
திரு. திருமதி சி. சிவகுமார் தம்பதிகள்.

(64168)

## "நியு பவர் வேர்ல்ட்" ஸ்போர்ட்ஸ் சென்ரர் திருநெல்வேலிச் சந்தி.

உடற்பயிற்சி சாதனங்கள், நவீன விளையாட்டு உபகரணங்கள், புதுப்பொலிவுடன் கேடயங்கள், ஷீல்டுகள், கிரிக்கெற் "ஜேசிக்கள்" விற்பனைக்குண்டு.

**குறிப்பு: உடற்பயிற்சிகள் நடைபெற்று வருகின்றன.**
**கலாசாலை வீதி, திருநெல்வேலி.**

(சி-53468)

## ஜி.எஸ். லிங்கநாதன் அன் கோ புதிய கட்டடத்தொகுதி திறப்பு விழா அழைப்பு

எமது ஸ்தாபனம் நிகழும் ஆவணித் திங்கள் நாளை (27.08.2007) முற்பகல் 9.30 மணி முதல் 10.40 மணி வரையான சுபநேரத்தில் இல. 47 பெரியகடை வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள புதிய கட்டடத்தொகுதி யாழ்ப்பாணம் கொமர்ஷல் வங்கி முகாமையாளர் திருவாளர் ச. ரவீந்திரா அவர்களால் திறந்து வைக்கப்படவுள்ளதால், இவ்வைபவத்தில் கலந்து சிறப்பித்து நல்லாசிகளை வழங்குமாறு எமது வாடிக்கையாளர்கள், நண்பர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நவீன புடைவை தினுசுகளின் தரமான புதிய ரகங்களை நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

**ஜி.எஸ். லிங்கநாதன் அன் கோ**
யாழ்ப்பாணம்.

அனைவரையும் அன்புடன் அழைக்கும்
**நிர்வாகத்தினர்.**

## பாணின் விலையைக் குறைக்க அமைச்சர் டக்ளஸ் உறுதி

குடாநாட்டில் பாணின் விலையைக் குறைக்கும் வழிமுறைகள் தொடர்பாக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆராய்ந்து வருவதாக அறிவிக்கப்படுகிறது. அமைச்சு இது தொடர்பாக வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யாழ். பேக்கரிச் சங்கத்தின் பிரதிநிதிகளைச் சந்தித்து பாணின் விலையைக் குறைப்பது தொடர்பில் ஆராய்ந்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பேக்கரிச் சங்கப் பிரதிநிதிகள் முகங்கொடுத்து வருகின்ற பிரச்சினைகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டார்.

இதன்பிரகாரம் பாண் உற்பத்திக்கான மூலப்பொருள்களை நியாய விலையில் தருவிப்பதன் அவசியம் குறித்தும் எரிவாயுவுக்கான தட்டுபாடு குறித்தும் உணர்த்தப்பட்ட நிலையில், கூடிய விரைவில் இப்பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கு தான் நடவடிக்கைகளை மேற்கொள்வதாக அமைச்சர் தெரிவித்தார்.

பாணின் நிறையைக் குறைக்காமல் அதன் விலையை கொழும்பு விலைக்குக் கொண்டு வர வேண்டும் என்பதே தனது எதிர்பார்ப்பாக உள்ளதெனச் சுட்டிக்காட்டிய அமைச்சர் கூடிய விரைவில் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக உறுதியளித்துள்ளார் - என்றுள்ளது. (அ-1)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 1937 | 2005 |
| 12 | 08 |
| 08 | 17 |

**திருமதி பரராசசிங்கம் கிருஷ்ணவதி**
திதி: 26.08.2007

உயிர் தந்து உடல் தந்து உறவாக்கினாய்
உதிரம் ஊட்டி எமை ஆளாக்கினாய்
உன் உயிர் உருக்கி எமை உயர்வாக்கினாய்

கண்ணுக்கு இமையன்றிக் காவலுண்டோ?
கன்றுக்குப் பசுவன்றிச் சொந்த முண்டோ?
கண்ணிரண்டும் உன்னுருவே காணவேண்டும்.
காலிரண்டும் உன்னடியே நாடவேண்டும்.

பண்ணமைக்கும் நா உனையே பாடவேண்டும்.
பக்தியோடு கையுனையே கூடவேண்டும்.
எண்ணமெல்லாம் உன் நினைவே ஆக வேண்டும்மம்மா

உங்கள் ஆத்மா சாந்திபெற எல்லாம்வல்ல ஆத்திசூடிப் பிள்ளையாரை மனமுருகி வேண்டுகின்றோம்.

27/7, இந்து மகளிர் ஒழுங்கை,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
021 222 3205.

**குடும்பத்தினர்.**
(யாழ்ப்பாண வணிக நிலையம்).

(64159)

## 24 ஆவது ஆண்டு நினைவலைகள்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 11 - 04 - 1936 | 26 - 08 - 1983 |

திருமதி
**தியாகராசா மாணிக்கம்**
(சின்னாலடி காரைநகர்)

கருவாய் சுமந்து
உயிராய் வளர்த்து
அவையோர் அவையில்
அரியாசனம் இருக்க வைத்த அம்மா!
அஞ்சலிகள்! ஆசி தாருங்கள்!

**ஈஸ்வரன் ரேடர்ஸ்**
69, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 2815

Eswaran Trading Co.
Jaffna - Killinochchi - Colombo.
Transport Service
No. 201B, Dam Street, Col - 12.
Tel.: 2433889, 2435247

பிரிவால் கலங்கி நிற்கும்:
அன்புக் கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

குறிப்பு: அன்னாரின் ஞாபகார்த்தமாக இன்று (26.08.2007) ஞாயிற்றுக்கிழமை நல்லூர் வடக்கு வீதியில் அமைந்துள்ள துர்க்கா மணிமண்டபத்திலும், சந்நிதி ஆச்சிரமத்திலும், தெகிவளை வெங்கடேசப் பெருமான் ஆலயத்திலும் அன்னதானம் வழங்கப்படும். இந்நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் அன்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(சி-53469)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி இரத்தினம் சுப்பிரமணியம் (பெரியம்மா)



யாழ். 73ஆம் இல. கொழும்புத்துறை வீதி, பாண்டியன்தாழ்வில் வசித்த திருமதி இரத்தினம் சுப்பிரமணியம் 21.08.2007 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.08.2007) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கொழும்புத்துறை வீதி,
பாண்டியன்தாழ்வு. (64161)

தகவல்:
**மகன், மருமகள், பேரப்பிள்ளைகள்.**

### இராசசிங்கம் கணேசதாசன்

மயிலங்காட்டைப் பிறப்பிடமாகவும் ஏழாலை மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட இராசசிங்கம் கணேசதாசன் (25.08.2007) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் கமலவேணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற இராசசிங்கம் - செல்லம்மா தம்பதியரின் மூத்த மகனும் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை - விசாலாட்சி தம்பதியரின் மூத்த மருமகனும் சுகந்தன் (மக்கள் வங்கி - சுன்னாகம்), சுபந்தினி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜனக்குமாரின் மாமனும் கஜானன், அபிராமி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.08.2007) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் ஏழாலை இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஏழாலை மேற்கு,
ஏழாலை.

தகவல்:
**சுகந்தன் (மகன்).**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய அரசை ஆட்டங்காண வைத்துள்ள அமெரிக்காவுடனான அணுசக்தி ஒப்பந்தம்



அமெரிக்காவுடன் இந்தியா செய்து கொண்டுள்ள அணுசக்தி ஒப்பந்தம் இந்திய மத்திய அரசையே ஆட்டங்காணச் செய்யும் அளவுக்கு எதிர்ப்புக்களை ஏற்படுத்தியிருக்கின்றது.

இந்திய நாடாளுமன்றில் பெரும்பான்மை எதிர்க்கட்சியான பாரதீய ஜனதாவும் அதனுடன் இணைந்த சிவசேன போன்ற கட்சிகளும் மத்திய அரசின் இந்த ஒப்பந்தத்தை எதிர்ப்பதைப் புரிந்துகொள்ளலாம். ஆனால் இந்தியக் காங்கிரஸின் தோழமைக்கட்சிகளான இந்திய கம்யூனிஸ்ட் மற்றும் மார்க்ஸீய கம்யூனிஸ்ட் கட்சியும் மூர்த்தண்யமாக எதிர்க்கத் தொடங்கியிருப்பதுதான் ஆச்சரியமாகவிருக்கின்றது.

ஒப்பந்தத்தை மீள்பரிசீலனை செய்யும் பேச்சுக்கே இடமில்லையென்று இந்தியப் பிரதமர் மன்மோஹன்சிங் அறிவித்துள்ளார். அதே கருத்தைத்தான் அமெரிக்க அதிகாரிகளும் வெளியிட்டுள்ளனர். ஆனால் இந்த ஒப்பந்தம் கைவிடப்படாவிடில் பாரதூரமான விளைவுகள் ஏற்படும் என்று அரசாங்கத்துடன் இணைந்துள்ள கம்யூனிஸ்ட் கட்சிகள் அறிவித்துள்ளன.

அணு ஒப்பந்தம் பற்றி விவாதம் இந்திய நாடாளுமன்றத்தில் இப்பொழுது இடம்பெற்றுவருகின்றது. அணு ஒப்பந்தம் மீது வாக்கெடுப்பு எதுவும் நடத்தப்படமாட்டாதென்றே கருதப்படுகின்றது. என்றாலும் வாக்கெடுப்பொன்றை நடத்தச்செய்து காங்கிரஸ் கட்சித் தலைமையிலான அரசைக் கவிழ்த்துவிட முடியுமானால் அது பாரதீய ஜனதாவுக்கு மகிழ்ச்சியளிப்பதாகவே இருக்கும்.

**பெரிய அளிவில் பொருளாதார வளர்ச்சி கிட்டுமாம்**

இந்தியாவிலும் அமெரிக்காவிலும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்க்கிறார்கள் என்பதற்காக இந்த ஒப்பந்தம் குறித்து மீண்டும் பேசும் உத்தேசம் ஏதும் இல்லை என்று அமெரிக்க வெளியுறவுத்துறை அதிகாரி கன்சாலோ காலிகோஸ் வாஷிங்ரனில் செவ்வாய்க்கிழமை தெரிவித்தார்.

இந்த ஒப்பந்தத்தை நிறைவேற்ற எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை இந்திய அரசு மேற்கொண்டு வருகிறது. நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் எதிர்ப்பதை எதிர்கொள்ளும் நடவடிக்கையிலும் அது இறங்கியிருக்கிறது. அதைப்பற்றி நாங்கள் கருத்து ஏதும் சொல்வதற்கில்லை.

ஒப்பந்தத்துக்கு அமெரிக்க நாடாளுமன்றத்தின் (காங்கிரஸ்) ஒப்புதலைப் பெறும் நடவடிக்கையில் புஷ் நிர்வாகம் முனைப்புக் காட்டி வருகிறது.

மிகக் குறைந்த செலவில் மின்சாரம்பெற இந்திய மக்களுக்கு இந்த ஒப்பந்தம் உறுதுணையாக இருக்கும். தங்களுடைய சக்திக்கும் மிஞ்சிய அளவில் பொருளாதார வளர்ச்சியைப் பெற இந்திய மக்களுக்கு இந்த ஒப்பந்தம் மூலம் புதிய வாய்ப்புக் கிடைத்திருக்கிறது.

## காலைவாரிவிடும் நிலையில் தோழமைக்கட்சிகள்

என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

**அரசியல் ஆதாயமே நோக்கமாம்**

இந்திய-அமெரிக்க அமைப்பின் தலைவர் அசோக் மாகோ இது பற்றிக் கருத்து வெளியிடுகையில் நாட்டு நலனை விட தங்களது அரசியல் ஆதாயமே முக்கியம் என



நினைக்கும் சில கட்சிகள் தான் இந்திய - அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தத்தை எதிர்க்கின்றன என்று கூறியுள்ளார்.

'இந்திய - அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தத்தை இந்திய - அமெரிக்கர் அமைப்பு வரவேற்கிறது. தற்போது இந்த ஒப்பந்தத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்தியாவில் சில கட்சிகள் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளைப் பெரிதாக எடுத்துக் கொள்ளத் தேவையில்லை. இது ஒரு சாதாரண அரசியல் நிகழ்வு' என்றார் அவர்.

**இந்தியா மீதான நம்பிக்கை குலைந்துவிடும்**

அணுசக்தி ஒப்பந்தத்தை முறித்துக் கொண்டால் இந்தியா மீதான நம்பகத்தன்மையை அமெரிக்கா மட்டுமல்ல பிறநாடுகளும் இழந்துவிடும் என்று அமெரிக் காவுக்கான இந்தியத் தூதர் ரொனேன் சென் எச்சரித்துள்ளார்.

'ரீடிஃப் - இந்தியா அப்ராட்' என்ற இணையத்தளத்துக்கு அளித்த பேட்டியில் அவர் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

'அமெரிக்க நாடாளுமன்றத்தால் ஏற்கப்பட்டு சட்டமாகவே ஆகிவிட்ட ஹைட் திருத்தத்தை இனி மாற்ற முடியாது. ஜோர்ஜ் புஷ்ஷின் பதவிக்காலம் முடிவதற்குள் இந்த ஒப்பந்தம் அமுலுக்கு வராவிட்டால் அது பெரிய துரதிருஷ்டமாகவே இருக்கும். பிரதமர் மன்மோகன் சிங் குறிப்பிட்டதைப் போல, இந்தியா மீது பரிவும் அக்கறையும் கொண்ட அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷைப்போல இனி அமெரிக்காவுக்கு எப்போது நல்ல தலைவர்கள் வாய்ப்பார்கள் என்று கூறடியாது என்று சென் மேலும் கூறியுள்ளார்.

நாடு சுதந்திரம் அடைந்த புதிதில், இப்படியொரு அச்சம் வெளிநாட்டுடனான ஒப்பந்த விஷயத்தில் வந்தால் நியாயம்; நாடு சுதந்திரம் அடைந்து 60 ஆண்டுகளுக் குப் பிறகு இப்படியொரு அச்சமா? நாம் முதிர்ச்சி அடைந்துவிட்டோம், நமக்குத் தன்னம்பிக்கை இருக்கிறது என்பதற்கு இதுவா அடையாளம்?

இந்தியாவுக்கு அணுத் தொழில்நுட்பம் கிடைக்கக்கூடாது என்று ஒதுக்கிவைத்த வல்லரசே இன்று அதை வழங்கவேண்டும் என்று முன்வந்திருக்கிறது.

**இறையாண்மை பாதிக்கப்படமாட்டாது**

அமெரிக்காவுடனான அணு சக்தி ஒப்பந்தத்தால் இந்தியாவின் இறையாண்மை பாதிக்கப்படும் என்று எதிர்க்கட்சிகளும் இடதுசாரிக் கட்சிகளும் வலியுறுத்தி வருகின்றன. ஆனால், மத்திய அரசு இதை மறுக்கிறது. இந்த விஷயத்தில் இந்தியாவின் உரிமைகள் பறிபோகவில்லை என்பது பிரதமர் மன்மோகன் அளித்திருக்கும் விளக்கம்.

உடன்பாடு சம்பந்தமான சர்ச்சை ஒருபுறமிருக்க, எதிர்காலத் தேவைக்கான சக்தி, சுற்றுச் சூழலை மாசுபடுத்தாத அணு சக்தியிலிருந்து தான் பெறப்பட வேண்டும் என்ற வாதம் தற்போது முன்வைக்கப்படுகிறது.



அமெரிக்க - இந்திய அணு சக்தி ஒப்பந்தத்தை அடுத்து மேலும் பல அணுமின் உலைகளை இந்தியா வில் நிறுவ அமெரிக்க நிறுவனங்கள் ஆர்வம் கொண்டுள்ளன.

**அணு உலைகளால் ஏற்படக்கூடிய ஆபத்துகள்**

ஒவ்வோர் அணுமின் உலையும் ஒரு சிறிய அணுகுண்டுக்கு சமம் என்பதை ரஷ்யாவின் செர்னோபில் அணு உலை வெடிவிபத்து உணர்த்தியது. விபத்து நேராதவரை பிரச்சினை இல்லை. தாராப் பூர் உள்ளிட்ட அணு மின் நிலையங்களிலும் விபத்துக்கள் நேர்ந்துள்ளன. ராஜஸ்தானிலுள்ள அணுமின் உலையில் நடந்த விபத்தில் ஏராளமான தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டனர்.

ஜப்பானில் மிகப்பெரிய அணுமின் நிலையம் சமீபத்திய பூகம்பத்தால் சேதமடைந் திருப்பதை அந்நாட்டு அரசு ஒப்புக்கொண்டுள்ளது.



புஷ்

கதிரியக்கக் கழிவு கலந்த தண்ணீர் கடலுக்குத் திருப்பிவிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த விபத்தையடுத்து, அணு மின்சாரம் பற்றிய விவாதமும் அங்கு சூடுபிடித்துள்ளது.

மனிதனின் முழுக்கட்டுப்பாட்டிற்குள் அணுமின் சக்தி வருமானால் தாராளமாக அணு சக்தித் திட்டங்களை அனுமதிக்கலாம். ஆனால் நிலைமை அப்படி இருக்கும் என்று உறுதியாகக் கூற முடியவில்லையே!

**செர்னோபில் விபத்து**

1986 ஏப்ரல் 26ஆம் திகதி ரஷ்யாவின் செர்னோபில் விபத்து அணு மின் உலையில் ஏற்பட்ட மாபெரும் வெடிப்பு, பெரும் சேதத்தை

(11ஆம் பக்கம் பார்க்க)

# இந்தியக் கிரிக்கெட் அரங்கில் மேலும் வலுக்கிறது சர்ச்சை ; கபில்தேவ் நீக்கப்பட்டார் !



கிறீஸ் கரிஸ்

இந்தியன் கிரிக்கெட் லீக் அமைப்பில் முக்கிய பதவியை வகிப்பதன் காரணமாக, தேசிய கிரிக்கெட் அக்கடமியின் தலைவர் பதவியில் இருந்து கபில்தேவ் இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையினால் நீக்கப்பட்டார்.

மேலும் லீக்கில் இணைந்த அனைத்து வீரர்களுக்கும், சர்வதேச மற்றும் உள்நாட்டு போட்டிகளில் விளையாடுவதற்கான தடையை கிரிக்கெட்சபை அறிவித்துள்ளது.

சுபாஷ் சந்திராவின் எஸ்ஸெஸ் குழுமத்தின் இந்தியன் கிரிக்கெட் லீக் (ஐ.சி.எல்.) அமைப்பு தொடர்பான அறிவிப்பு வந்ததில் இருந்தே அந்த அமைப்புக்கும் கிரிக்கெட் சபைக்கும் இடையே மோதல்கள் வலுவாகிக் கொண்டே போகிறன.

மேலும், அந்த அமைப்பின் உறுப்பினர்கள் மற்றும் அதில் இடம் பெற்றுள்ள வீரர்களின் பெயர்கள் அறிவிக்கப்பட்டன.

அதன்படி லீக்கின் உறுப்பினர்களாக கிரான்மோரே, சந்தீப் பாட்டீல், கபில்தேவ் மற்றும் எரப்பள்ளி பிரசன்னா ஆகியோரும், இயக்குநராக பல்விந்தர் சிங்சாந்துவும் இடம் பெற்றுள்ளதாகவும், பாகிஸ்தான் வீரர்கள் இன்சமாம் உல்-ஹக், முகமது யூசுப், தென்னாபிரிக்காவின் லான்ஸ் குளுஸ்னர் இடம் பெற்றுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் லீக்கில் இணைந்த வீரர்கள் மீது நடவடிக்கை எடுக்கும் பொருட்டு, இந்தியக் கிரிக்கெட் சபைச் சிறப்புக் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டு, முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன.

மும்பையில் அதன் தலைவர் ஷரத் பவார் தலைமையில் நடந்த கூட்டத்துக்குப் பிறகு, 'விதிமுறைகளை மீறி லீக்கில் இணைந்த காரணத்தால், தேசிய கிரிக்கெட் அக்கடமி தலைவர் பதவியில் இருந்து கபில்தேவ் நீக்கப்பட்டார்' என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து, தேசிய கிரிக்கெட் அக்கடமியின் இடைக்கால தலைவராக அஜய் ஷிர்கே நியமிக்கப்பட்டுள்ளார்.

**ஐ.சி.சி. தலையிடாது**

இந்தியன் கிரிக்கெட் லீக் (ஐ.சி.எல்.) மற்றும் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை ஆகியவற்றுக்கு இடையேயான விவகாரத்தில் தலையிடப் போவதில்லை என சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி.) திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது.

லீக் அமைப்பின் உறுப்பினர்கள் மற்றும் அதில் இடம்பெற்றுள்ள வீரர்களின் பட்டியல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் அதில் இணையும் வீரர்கள் மீது கிரிக்கெட் சபை கடுமையாக நடவடிக்கைகள் எடுத்து வருகிறது.

இந்நிலையில் லீக் விவகாரத்தில் இந்தியக் கிரிக்கெட் சபை மட்டுமே நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், அந்த அமைப்பை அங்கீகரிப்பதும் நிராகரிப்பதும் கூட சபையின் முடிவே ஆகும் என்றும் ஐ.சி.சி. நிர்வாகிகள் கூட்டத்தில் ஏற்கனவே முடிவெடுக்கப்பட்டதாக ஐ.சி.சியின் செய்தித் தொடர்பாளர் அறிவித்துள்ளார்.

மேலும், லண்டனில் கடந்த ஜூன் மாதம் நடந்த கூட்டத்தில் இது தொடர்பான கோரிக்கையை இந்தியா கிரிக்கெட் சபை எழுப்பியதையும் அவர் சுட்டிக் காட்டினார்.

இதனிடையே லீக்கில் இணையும் வீரர்களின் மீது கடுமையாக மேற்கொண்டு வரும் கிரிக்கெட் சபை உள்ளூர் போட்டிகளில் விளையாடும் வீரர்களுக்கு வழங்கப்படும் தொகையை இரட்டிப் பாக்கியதுடன், போட்டிக்கான பரிசுத் தொகையும் 60 லட்சம் ரூபாவில் இருந்து 4.2 கோடி ரூபாவாக உயர்த்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

**லீக்கில் நியூசிலாந்து வீரர்கள்**

நியூசிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னாள் சகலதுறை வீரர் கிறிஸ்ஹரிஸ், இந்தியன் கிரிக்கெட் லீக் (ஐ.சி.எல்.) அமைப்பில் இணைந்துள்ளார்.

அவரைத் தொடர்ந்து முன்னாள் நியூசிலாந்து அணி வீரர்களான கிறிஸ் கெய்ன்ஸ் மற்றும் நாதன் ஆஸ்லே ஆகியோரும் லீக்கில் இணையவுள்ளதாக அந்நாட்டுத் தொலைக்காட்சி ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

நியூசிலாந்து அணிக்காக 23டெஸ்ட் போட்டிகளையும், 250 ஒருநாள் போட்டிகளையும் விளையாடியுள்ள ஹரிஸ், தனது துடுப்பாட்டம் மற்றும் பந்துவீச்சு ஆகியவற்றில் தான் ஓய்வு பெறும் வரை தொடர்ந்து சிறப்பாக பிரகாசித்தவர். ஆஸ்லே மற்றும் கெயின்ஸும் குறிப்பிடத்தக்கவர்கள்.

அண்மையில் லீக் தனது வீரர்களின் பட்டியலை அறிவிக்கத் தொடங்கியதன் தொடர்ச்சியாக, வெவ்வேறு நாட்டு வீரர்களும் அதில் இணைய ஆர்வம் காட்டிவருகின்றனர்.

**புச்சர் மறுப்பு**

இந்தியக் கிரிக்கெட் லீக்கில் இணையுமாறு, இங்கிலாந்து அணியின் முன்னாள் வீரர் மார்க் புச்சருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக வெளியான தகவலை அவர் மறுத்துள்ளார்.

இங்கிலாந்து அணிக்காக 71 டெஸ்ட் போட்டிகளில் விளையாடிய அனுபவம் மிக்க புச்சருக்கு லீக் அழைப்பு விடுத்ததாக 'தி ரைம்ஸ்' பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது.

லீக்கின் நிர்வாகக் குழுவில் இங்கிலாந்தின் முன்னாள் அணித் தலைவர் டோனி கிரேக்கும் இடம்பெற்றுள்ள நிலையில் புச்சரை அவர் தேர்ந்தெடுத்துள்ளார் என்றும் அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்நிலையில் இதுபோன்ற அழைப்பு ஏதும் தனக்கு வரவில்லை என்றும், இந்தத் தகவல் தன்னை ஆச்சரியத்தில் ஆழ்த்தியதாகவும் [illegible]

**மேற்குவங்க அரசு ஆதரவு**

கிரிக்கெட் லீக் அமைப்பில் இணையும் வீரர்களுக்கு தடைவிதிப்பது உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை எடுத்து வரும் நிலையில் லீக் அமைப்புக்கு மேற்குவங்க அரசு முழு ஆதரவை அளித்துள்ளது.



இது தொடர்பாக அம்மாநிலத்தின் விளையாட்டுத்துறை அமைச்சர் சுபாஷ் சக்கரவர்த்தி தனியார் தொலைக்காட்சி ஒன்றில் பேட்டியளிக்கையில், லீக் மற்றும் அதன் வீரர்களுக்கு அனைத்து விதங்களிலும் மாநில அரசு துணைபுரியும் என கூறியுள்ளார்.

லீக்கில் இடம்பெற்றுள்ள வீரர்களுக்கு வேண்டிய உதவிகள் வழங்கப்படும் என்று கூறிய அவர், இதில் எவ்வித தடையும் இல்லை என்றும், மாநில அரசுக்கு சொந்தமான மைதானங்களும் விளையாடுவதற்காக அனுமதிக்கப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

மேலும் தற்போது மாநில அரசின் வசமுள்ள கல்கத்தாவின் ஈடன்கார்டன் மைதானத்தில் விளையாட லீக்குக்கு அனுமதி வழங்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார். ❖

**டிலான்**

## உதைபந்தாட்ட இறுதியாட்டம் இன்று

யாழ்ப்பாணம்,ஓக.26

இளவாலை புனித கென்றியரசர் கல்லூரியின் நூற்றாண்டு விழாவையொட்டி இளவாலை யங்கென்றீசியன் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறுகின்றது.

இன்று மாலை 3 மணிக்கு இளவாலை புனித கென்றியரசர் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ள இந்த இறுதியாட்டத்தில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது.

இந்தப்போட்டிக்கு பிரதம விருந்தினராக இளவாலை புனித கென்றியரசர் கல்லூரியின் உபஅதிபர் அருட்திரு. ரஞ்சிதராஜ் அடிகளும் சிறப்பு விருந்தினராக வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் என். நவரட்ணராஜாவும் கலந்துகொள்வார்கள். (50-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவறிவிட்டது

424, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியைச் சேர்ந்த ஐயாத்துரை ஜெகநாத் என்பவருடைய தே.அ.அட்டை (860923203V) செட்டித்தெருவுக்கும் ரெம்பின் றோட்டுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சந்தியா மலரிக் கொட்டம், நல்லூர் என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும்.

## 45-ஆம் நாள் நினைவஞ்சலி

மனம் மகிழ
27
08
1951



மனம் நெகிழ
12
07
2007

### அமரர் மணியம் கணபதிப்பிள்ளை

*(அதிபர், யா/தும்பளை சிவப்பிரகாச ம.வி.)*

பண்புடனே பல் பெருமை நாமும் கொள்ள- நீங்கள்
பாரோங்க பல கட்டடங்கள் அமைத்து வைத்தே
பல் உயிரும் பல கலைகள் பயின்று வாழ
ஆசிரியர் மாணவரும் இணைந்து நிற்க
விண்ணோங்க சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தை
வியாபித்த எம் அதிபர் பெருந்தகையை
எண்ணாது எமை அறியாதழைத்த ஈசன்- என்றும்
இணையடியோ டுங்களையே இணைத்திருப்பான்.

*உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்:*

யா/ தும்பளை சிவப்பிரகாச ம.வி.,
பருத்தித்துறை.

**அதிபர், ஆசிரியர்கள், ஊழியர்கள்.**

(64129)

## விற்பனைக்கு

பாண்ரில், கறணம், நங்ஸ், இங்கிலிஸ் நங்ஸ், கோமர், மோடினா, சொக் கோப்பியன் போன்ற நல்லினப் புறாக்கள் விற்பனைக்கு உண்டு

*தொடர்புகளுக்கு:*

**பெனின்சுலா விருதி**
281, கண்டி வீதி, யாழ்ப்பாணம். 0214590374. (64135)

## காணி விற்பனைக்கு

கோண்டாவில் கிழக்கு, பலாலி - இருபாலை வீதிச் சந்தியிலிருந்து 100 அடி தூரத்தில், ஐயப்பன் கோயிலுக்கு அண்மையில் 15 அடிப் பாதையுடன் 6½ பரப்பு வீடு கட்டக் கூடிய காணி விற்பனைக்குண்டு.

*தொடர்பு: 011-2501475, 077-6320676.* (சி.53431)

## CALLING CARD

உங்கள் இல்லங்களில் இருந்த வண்ணம் குறைந்த கட்டணத்தில் வெளிநாட்டு அழைப்புகளைப் பெற்றுக்கொள்ள.

**5/=**

T.P.: 021 222 7835
021 222 7310

(சி/53418)

## கோழிக்குஞ்சு விற்பனை

சிவப்பு, வெள்ளை பேட்டுக்குஞ்சுகளுக்குப் பதிவு செய்தவர்கள் 27.08.2007 மாலை பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் புறொயிலர் குஞ்சுகளும் 01.09.2007 அன்று பெற்றுக்கொள்ளலாம். முன்பதிவு செய்யவும்.

நல்லூர் பாம், 19, முருகேசர் லேன், நல்லூர். (64080)

## மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 37 வயது, ஆசிரியைக்கு பெற்றோர் தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். சைவபோசன அரச உத்தியோகமுடையோர் விரும்பப்படுவர். பொறுப்புக்கள் அற்ற தாரமிழந்தவரின் விண்ணப்பங்களும் பரிசீலிக்கப்படும்.

*விளம்பர இல. 3000, மே/பா உதயன்.* (63972)

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



*28.07.2007 அன்று சிவபதம் அடைந்த எங்கள் குடும்ப விளக்கு*

### திருமதி தம்பு செல்லம்மா

அவர்களின் வீட்டுக்கிருத்தியமும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நாளை (27.08.2007) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளன. இந் நிகழ்விற்கு தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

1/4, மடம் வீதி,
யாழ்ப்பாணம்.

ஜெயரட்ணம் இராஜேஸ்வரி
*(மகள்).*


(64114)

## நினைவலைகள்

இரண்டாமாண்டு இருபத்தோராமாண்டு முப்பத்தோராமாண்டு



அமரர் சின்னப்பு முருகேசு
*(இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்)*
ஆண்டவன் அடியில்
17.08.2005



அமரர்
முருகேசு ஜெயகாந்தன்
ஆண்டவன் அடியில்
06.02.1986



அமரர்
முருகேசு அன்னலட்சுமி
ஆண்டவன் அடியில்
16.03.1976

திதி: திரயோதசி 26.08.2007

**ஆண்டவன் அடி பணிந்த ஆவணிப் பூக்களே!**
**நிதம் உங்களை நினைக்க நெஞ்சம் கனக்கிறதே!**
**நினைவு தடுமாறுகிறதே!**
**கண்ணீர்ப் பூக்கள் சொரிகிறதே!**

*ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!*

பருத்தியோலை, கந்தரோடை,
சுன்னாகம்.

(63823)


**குடும்பத்தினர்.**

## 31 ஆம் நாள் நினைவு அஞ்சலி

அமரர்

### முத்தம்மா இந்திரசித்து

பிறப்பு: 1936.01.10
இறப்பு: 2007.07.27



மண்ணகம் வந்துமே- நீ
எழுபத்து மூன்றகவை
பண்புசேர் மணாளனுடன்
வாஞ்சையுடன் வாழ்வோச்சி
தண்மைசேர் குணத்தின் குன்றாய்
பரம்பரை மூன்றைக் கண்டே
விண்ணகம் ஏகிய நாள்
முப்பத்து ஒன்றாயிற்றே!

வல்லை வீதி,
தொண்டைமானாறு.

**ஆ.பிரபானந்தன், பி.பவானி,**
**பி.பிரபானுசன், பி.பிரதிக்ஷா.**

(64065)

Save the Children
in Sri Lanka

## கேள்வி கூறல் அழைப்பிற்கான கால நீடிப்பு (IFB)

01) சிறுவர் பாதுகாப்பு இலங்கை நிறுவன மாவட்ட கேள்விச் சபையின் சார்பாக மாவட்ட முகாமையாளர், சிறுவர் பாதுகாப்பு (இலங்கை) நிறுவனம் 2007, யாழ்ப்பாணம் அவர்களினால் கீழே தரப்பட்டுள்ள முன்பள்ளிகளினது நிர்மாண வேலைகளைப் பூர்த்தி செய்யும் வண்ணம் மூடிய கேள்விகள் கோரப்படுகின்றன.

1) அர்ச். தோமஸ் முன்பள்ளி, முனை, பருத்தித்துறை & M8
2) கரும்பாக்கட்டி முன்பள்ளி தம்பசிட்டி - M8
3) அத்தியடி முன்பள்ளி, பருத்தித்துறை - M8
4) நேசகம் முன்பள்ளி, பருத்தித்துறை - M8
5) மேலைப்புலோலி முன்பள்ளி பருத்தித்துறை - M8
6) குடத்தனை முன்பள்ளி - M7
7) அம்பன் முன்பள்ளி - M7
8) அன்னை வேளாங்கன்னி முன்பள்ளி, முனை - M7

02) கேள்வி ஆவணங்களினை இலவசமாக யாழ்ப்பாணத்தில் 146, கோயில் வீதியில் அமைந்துள்ள சிறுவர் பாதுகாப்பு இலங்கை மாவட்ட முகாமையாளரின் காரியாலயத்தில் பார்வையிடலாம்.
மேற்படி காரியாலயத்திலிருந்து கேள்விக்கான பத்திரங்களினை மீளளிக்கப்படாத கேள்விப் பணம் ரூபா 500 இனை ஒவ்வொரு வேலைக்கும் செலுத்தி 31ஆம் திகதி பிற்பகல் 15 மணிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளவும்.
கேள்விகள் பெற்றுக்கொள்வது யாவும் செப்ரெம்பர் 5ஆம் திகதி பகல் 10 மணிக்கு முடிவடையும்.

03) சகல கேள்விதாரர்களும் நிர்மாணப் பயிற்சியும் அபிவிருத்திக்குமான நிறுவகத்துடன் (ICTAD) கட்டட நிர்மாண பிரிவின் கீழ் பதியப்பட்டு இலங்கை தேசிய நிர்மாண சங்கத்தில் (NCASL) செல்லுபடியான அங்கத்துவம் பெற்றிருத்தல் வேண்டும். ஒவ்வொரு வேலைக்கும் தகுதியான (ICTAD) தராதரம் முதலாம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி தாராதரங்களுக்கான ஆவணங்கள் யாவும் கேள்விப் பத்திரங்கள் பெறுவதற்காகச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

04) கேள்விகள் யாவும் October 2 ஆம் திகதி வரைக்கும் செல்லுபடியாகும்.

05) கேள்விகள் யாவும் தத்தம் கேள்விகளின் பெறுமதியின் 2% இனை (100 ரூபாவுக்கு அண்ணளவாக்கி) அவற்றின் கேள்விப் பிணையாகச் செலுத்துதல் வேண்டும்.

06) கேள்விப் பிணைகள் யாவும் கேள்விகள் செல்லுபடியாகும் கால எல்லையிலிருந்து 28 நாள்கள் வரை செல்லுபடியாகும்.

07) கேள்விகள் சமர்ப்பித்தலுக்கான கால எல்லை செப்ரெம்பர் 5ஆம் திகதி காலை 10 மணியாகும்.

08) சீல் செய்து மூடப்பட்ட கேள்விகள் யாவும் *மாவட்ட முகாமையாளர், இலங்கைக்கான சிறுவர் பாதுகாப்பு நிதியம், 146, கோயில் வீதி, யாழ்ப்பாணம்* எனமுகவரியிடப்பட்டு பதிவுத் தபாலிலோ அல்லது நேரடிக் கையளிப்பு மூலமோ குறிக்கப்பட்ட நேரத்திற்கு முன்னராகச் சமர்ப்பிக்கலாம்.

09) கேள்வி சமர்ப்பித்தல் முடிவடைந்தவுடனேயே கேள்விகள் யாவும் திறக்கப்படும்.

10) கேள்விகள் திறக்கப்படும் பொழுது கேள்விதாரர்களோ அல்லது அவர்களது அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதிகளோ சமூகமளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

11) பந்தி 3 இல் குறிப்பிடப்பட்ட தகைமைகளுக்கு மேலதிகமாக கேள்விதாரர்கள் பின் வரும் தகைமைகளை பெற்றிருத்தல் வேண்டும்.

I. வங்கிக் கடன் வசதிகளுக்காக வங்கிகளால் வழங்கப்பட்ட உறுதிப்பத்திரம்

II. மேலே தரப்பட்ட தகுதியாளர்களுக்கு கேள்விப்பத்திரம் வழங்கப்பட்டபோதும் கேள்வி வழங்கலின் கேள்வி தாரர்களின் தராதரம் கருத்தில் கொள்ளப்படும்.

12) மேலதிக விவரங்களுக்கு அல்லது தெளிவுபடுத்தலுக்கு மேற்கூறப்பட்ட காரியாலயத்தில் பேரின்பநாதன் அவர்களைத் தொடர்புகொள்ளலாம்.

**அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்,**
**இலங்கைக்கான சிறுவர் பாதுகாப்பு நிதியம்,**
**146, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.**
**24.08.2007**

(சி/53453)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தண்ணீர்த் தாகம்



ஈழத்தின் மிக மூத்த எழுத்தாளர் சந்ததியைச் சேர்ந்தவர் பண்டிதர் க.சச்சிதானந்தன். சிறுகதை மூலவர் மூவரின் வரிசைக்கு அடுத்த சந்ததியினரைச் சேர்ந்த வர் அவர். பண்டிதர் சச்சிதானந்தன் ஐயாவை கவிஞராகவும் ஆய்வாள ராகவும் விரிவுரையா ளராகவுமே பலருக்கும் தெரியும். ஆனால், அவர் சிறந்த சிறுகதை எழுத்தாளருமாவார். 1938 முதல் 1944 வரை அவர் பல சிறுக தைகளை எழுதிக் குவித்தார்.

'தண்ணீர்த்தாகம்' ஈழத்துச் சிறுகதைகளில் சிறந்த ஒன்றாக மதிப்பி டப்படுவது.

பண்டிதர் சச்சிதானந்தன் ஐயாவின் பல்துறை ஆக்கத் திறமை நிகர ரற்றது; ஒப்புவமை இல்லாதது. தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகிய மூன்று மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்ற பெரியார் அவர். ஈழத் தின் பெருங் கவிஞர்களில் ஒருவர். ''யாழ்ப்பாணக் காவியம்'', ''பரு வப் பாலியர் படும்பாடு'' என்பன அவரது இரு பெரும் காவியங்கள். மஞ்சு காசினியம், இயங்கு தமிழியல் ஆகிய இரண்டு இலக்கண நூல்களையும் எழுதியுள்ளார். **Fundamentals of Tamil Prosody, Foot Prints of our Fathers** ஆகிய ஆங்கில நூல்க ளின் ஆசிரியருமாவார். ஓவியர், வானியல் வல்லுநர், ஆராய்ச்சியாளர் என்று பல்துறை சார் வித்தகரான இவர், எமது மண்ணில் வாழும் முதுபெரும் மாமேதை. 88 வயதான அவர் விபுலானந்த அடிகளாரின் நெருங்கிய சகபாடியுமாவார்.

பன்முகத்துறைசார் முதுபேரறிஞரின் சிறுகதையை இன்று வாசகர்களுக்குத் தருகிறோம்.

I

பங்குனி மாதம். வெயில் மிகவும் காய்தலாக அடித்துக் கொண்டிருந்தது. றோட்டில் அவ்வளவு நடமாட்டம் இல்லை. தூரத்தில் மாத்திரம் ஒருவன் குடை பிடித்துக்கொண்டு வியர்க்க வியர்க்க விறுவிறுக்கத் தார் றோட்டில் அவசரமாய் போய்க் கொண்டிருந்தான். அதற்கப்பால் ஒரு கட்டை வண்டி 'கடா கடா' என்று ஆடி ஆடி வந்து கொண்டிருந்தது. பன்னிரண்டு மணி வெயி லிலே யாரும் தலைகாட்டவில்லை. பகல் முழுவதும் வெயிலிலே திரியும் நாய்கூட சுவரோரத்தில் கிடந்த சிறு நிழலில் இளைத்துக் கொண்டிருந்தது. அவ்வளவு உக்கிரமான வெயில். பலர் பகலுறக் கம் போட்டார்கள். சிலர் புழுக்கம் தாளாமல் தவித்தார்கள். செட்டி யார் புதினப் பத்திரிகையோடு தூங்கி வழிந்துகொண்டிருந்தார்.

அந்த அரசமரத்தின் கீழ்த்தான் பகல் முழுவதும் மீனாட்சிக்கு வேலை. நியாஸ்தலத்துக்குப் போகும் கிளை றோட்டும் பெரிய தெருவும் கோணமாய்ச் சந்திக்கும் சந்தி அது. அந்த அரச மரத்தைச் சுற்றி வெயில் கடுமைக்கு உகந்த குளிர் நிழல். தட்டுச் சுளகிலே சின்னச் சின்னக்கூறாகக் கத்தரிக்காய், பிஞ்சு மிளகாய் நன்றாக அடுக்கிப் பக்குவமாக வைக்கப்பட்டிருந்தன. அவளுக்கு சோம் பேறித்தனமோ கொட்டாவியோ இல்லை. அன்றைக்கு வியா பாரம் அவ்வளவு ருசியாகவில்லை. கோடு கலைந்ததும் பள்ளிக் கூடம் விட்டதும்தான் வியாபாரத்தின் ருசி தெரியும். கொண்டு வந்த பெட்டியைக் காலி செய்து விட்டே வீடு திரும்புவாள். அப்பொழுது அவள் உள்ளத்தில் எழுவது ஆனந்தக் கடல்தான்.

தலையைக் கோதிக்கொண்டே பள்ளமான அடியில் சாய்ந் தாள். அரசமிலைகளை இடையிடையே அசைக்கும் காற்று அவள் கூந்தலையும் ஆட்டிக்கொண்டிருந்தது. ஒரு காகம் மாத்திரம் கொப்பிலே இருந்து பலத்த தொனி வைத்தது.

அவளைப் பார்த்தால் யாருமே இழி குலத்தவள் என்று சொல்ல மாட்டார்கள். அவளுடைய சிவந்த மேனியும் கருவண்டுக் கண் களும் யாரையும் கொள்ளை கொண்டுவிடும். அவள் ஜாதியைப் பற்றி யாருமே கேட்டதில்லை.

அப்படி அவர்கள் அறிந்திருந்தால் எப்பவோ அவள் வியாபாரத் தில் மண் விழுந்திருக்கும். ஊரார் மாத்திரம் அவளிடம் எதுவும் வாங்குவதில்லை. அவர்களுக்குத்தான் விசயந் தெரியுமே?

வெயில் எரிய எரிய அவளுக்கும் தாகம் எடுக்கத் தொடங்கி யது. பொறுத்துப் பார்த்தாள். நா வறளத் தொடங்கியது. இனி அவளால் சகிக்க முடியாது. மெதுவாக அவற்றைப் பெட்டியிலே போட் டுக்கொண்டு கிளம்பினாள். பக்கத்தில் வீடுகளில்லை. அவை யெல்லாம் காய்கறி விளையும் பூமியும் பற்றைக்காடுகளுந்தான்.

செழித்த கமுகுகளும் வாழைகளும் அங்கே கிணறு இருக்க வேண்டுமென்பதை ருசுப்படுத்தின. மெல்ல மெல்ல வீட்டின் அருகே வந்தாள். தெருவழியே ஓடிய சேற்றுத் தண்ணீர் இன்னும் அந்த எண்ணத்தைப் பலப்படுத்தியது. உள்ளே பெட்டியை வைத்துவிட்டு அங்கும் இங்கும் பார்த்தாள். யாரையும் காணவில்லை.

கிணற்றைக் காணக்காண மேலும் தாகம் அவளை வாட்டி யது. அடிநாவிலே சொட்டு ஜலமில்லாமல் வறண்டு போயிற்று. அந்த வெயிலின் அகோரத்திற்கு யாருக்குத்தான் தாகமில்லை!

கிணற்றுக் கட்டிலே விளக்கி வைத்த செம்பிலே நிறையக் குளிர்ந்த ஜலத்தைக் காண அவள் உள்ளமும், வாயும் அதிலே ஆழ்ந்து போயிற்று. பாவம், அந்த விடாயை அடக்க இன்னொரு விடாய் உதவியாய் இருந்தது. தான் அந்த விடாயைத் தீர்க்க அருகதையற் றவள் என்பதை அவள் அறிவாள். இழிகுலத்தில் பிறந்த பெண்கள் எல்லாம் தாகசாந்தி செய்யக்கூடாது என்று கடவுள் கட்டளை யிட்டிருக்கிறார் என்பது அவள் அபிப்பிராயம். அந்தச் செம்பை மாறி மாறிப் பார்த்தாள். யாரை யும் காணவில்லை.

II

''என்னடி (?) பாதகி'' என்று மிரட்டல் கேட்டது அதிகார தோரணையில்.

ஏங்கி விலவிலத்துப் போனாள் மீனாட்சி. உடம்பு சொட்ட வியர்த்தது. நெஞ்சு திக்திக் என்று அடித்துக் கொண்டது. கண்கள் மிரள மிரள விழித்தன. அவள் தான் செய்த களவு பிடிபட்டதை எண்ணிக் கல்லாய்ச்சமைந்து போனாள்.

''உனக்கு அவ்வளவு மமதையா பறைச் சிறுக்கி'' என்று ஆத்திரத்தோடு ஓடி வந்தார் நடேசய்யர். விபூதியைப் பொத்திக்கொண்ட கைகள் ஆத்திரத்தால் அங்குமிங்கும் எதையோ தேடின. கோபாக் கினி கண்களிலிருந்து பறந்தது.

''அவ்வளவு நெஞ்சுத் துணிவு கிணற்றுக்குக் கிட்ட வந்து செம்புச் சலத்திலும் தொட்டுவிட்டாயே? அனுஷ்டான ஜலத்தில் தொட உனக்கு அவ்வளவு தைரியம் வந்துவிட்டது'' பல்லைக் கடித்துக் கடித்து ஆத்திரத்தோடு அவளை விழுங்கப் போனார். பாவம் பறைப் பெண் அல்லவா? கோயிலுக்குப் போனால் எப்படிப் பிராயச்சித்தம் செய்வது என்று விட்டுவிட்டார் போலும்.

''மூதேவி நாயே, இனி என்னுடைய கிணற்றை நான் என்ன செய்வது? அனுஷ்டான பாத்திரத்தை வைத்துவிட்டு விபூதி எடுத்து வருவதற்கிடையில் இப்படிச் செய்துவிட்டாயா? இனி இந்தச் செம்பை....! நீ அந்தக் கதிரன் மகளல்லவா? என்னுடைய அனுஷ் டான ஜலத்தைத் தொட்ட நீ கொள்ளையிலே போகமாட்டாயா? சிவன் உன்னை வதைக்க மாட்டானா?''

ஒரு மின்னல் மின்னியது போல் இருந்தது. உலகமே இருண்டு மடமடத்து அவள் தலையில் கவிழ்ந்தது போல் இருந்தது. பூமியே அவள் கால்களிலிருந்து நழுவிவிட்டது. இரத்தம் நெற்றியிலிருந்து குபீரிட்டது. களங்கமற்ற பார்வைக் கண்ணீரோடு இரத்தம் சேர்ந்து ஓடியது. செம்பு அலங்கோலமாய் உருண்டு போய்விட் டது. அது அவள் கனிவாயைப் பற்றப்போய்த் தோல்வியடைந் ததற்காக அழுது கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தது.

''மூதேவி, இனி இந்தப்பக்கம் தலைகாட்டு, உன் தலையை நுள்ளி எடுத்துவிடுகிறேனோ இல்லையோ பார். உனக்கு இது போதாது போ நாயே வெளியே. சனியன்கள் வீட்டில் வந்து கூசாமற் கால் வைக்குதுகள்''

தங்கச்சிலைபோல இவ்வளவும் நின்ற உருவம், இரத்த ஆற் றோடு பெயரத் தொடங்கியது. பெட்டியை எடுத்துத் தலையில் வைத் துக் கொண்டு மெதுவாக வெளியே போய்விட்டாள். அவர் எறிந்த போது வாய்ச்செம்பு அவள் நெற்றியில் நன்றாய்க் கணீரிட்டு விட் டது. தீண்டாமை அசுரனின் அசுரத்தன்மை அவள் பிறைநுதலில் இரத்தத்தை வாங்கிவிட்டது.

பாவம் தாகவிடாய் தீர்ந்தபாடில்லை. களவுக்கேற்ற தண் டனை கிடைத்து விட்டதல்லவா? ஒரு பிராமணனின் அனுஷ்டா னப் பாத்திரத்தை தொட்டுவிட்டாளல்லவா? எவ்வளவு பொல்லாத கோரக்களவு. இதற்கு இந்தத் தண்டனை போதுமா? சிவனுடைய அனுஷ்டானத்தை முடிக்க விடாமல் தண்ணீரைத் தொட்டு தீட் டாக்கியவளல்லவா? பெண்ணைத் திட்டிய திட்டுக்களைப் பார்த் துப் பகவான் சிரித்துக்கொண்டிருந்தார். ''என் பிள்ளையின் கடூர நா வரட்சியைத் தணிக்காத உனக்கு என்மீது ஓர் அன்பா? உன்னு டைய அனுஷ்டானம் கொடிய நரகிற்கு வாயிலல்லவா'' என்று அழுகையோடுதான் அவர் சிரித்துக்கொண்டிருந்தார்.

சந்திரனுக்கும் இவள் முகத்திற்கும் நெடுங்காலம் ஒரு வித்தி யாசம். அது இன்றோடு பூர்த்தியாகிவிட்டது. அவள் மதி வதனத் திலும் மறு ஏற்பட்டுவிட்டது.

ஏழையின் தண்ணீர் விடாய் என்றுதான் தீருமோ?

III

நடுநிசி எங்கும் ஒரே நிசப்தம். ஆனால் அறைகளில் இருமும் சப்தமும் குழந்தைகளின் கீச்சுக்குரலும் இன்னும் ஒழிந்த பாடில்லை. 'ஐயோ அம்மா' என்று அடுத்த அறைகளில் வியாதிக் காரர் கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பது தெரிந்தது. குழந்தை களைத் தாலாட்டும் தாய்மாரின் பல தினுசான குரல். அங்கங்கே மின்சார விளக்குகள் தூக்கிக்கொண்டிருந்தன.

ஒரு கிழவன் பூநூலை இழுத்துவிட்டுக் கொண்டு மூலையிலே செருமிக்கொண்டு நெஞ்சைத் தொட்டுப் பார்த்தான். கஷ்டப்பட் டுக் கஷ்டப்பட்டு முக்கி முனகிக் கொண்டிருந்தான். அவனை யாரும் கவனிப்பார் இல்லை. அவன் சுற்றமெல்லாம் இன்று அவனைக் கைவிட்டு விட்டன. அவன் அவர்கட்கெல்லாம் என்ன செய்தான்? ஒரே ஒரு பிழை. வாலிபமாய் இருந்த காலத்திலே தெரியாமல் தூரத் திலே உள்ள வெள்ளாளப் பெண்ணைப் பார்ப்பனத்தி என்று கல் யாணம் செய்தான். சிலநாட்கள் சென்றதன் பின் சுற்றம் எல் லாம் அவனை இகழ்ந்து தள்ளிவிட்டது. அதன்பின்புதான் அவ னுக்கு விஷ யம் புரிந்தது. தான் வெள்ளாளப் பெண்ணைக் கட்டி விட்டான் என்று உணர்ந்ததும் மெல்ல அவளைக் கைவிட்டான். பெண் வழி யால் லாபமும் இல்லை. இனசனமும் இல்லை. இன்று வரையும் தனியே தான் காலந்தள்ளினான். இன்றைக்கு வியாதியாய்ப் போனான். கவனிப்பார் இல்லை. தர்ம ஆசுப்பத்திரியிலே கிடக்கிறான்.

அவனுக்கு மேலும் மேலும் மூச்சுவாங்கத் தொடங்கியது. தண்ணீர் விடாயெடுத்தது. அடிநாவிலே ஈரலிப்பில்லை. இருமி இருமி வரண்டு போயிற்று. தாகவிடாய் வர வர அதிகரித்தது. பேச் சுக் கொடுத்தாலோ இருமல் வாட்டுகிறது.

''அம்மா, தண்ணீர்! நாவை வறட்டுகிறது'' என்று சொன்னான் அந்தக்கிழவன் கெஞ்சும் குரலில். பதிலே இல்லை. அடுத்த அறை யில் இருந்து ஓர் இருமல்தான் அதற்குப் பதில். கொஞ்சநேரம் நிசப்தம்.

''அம்மா, என்னால் சகிக்க முடியவில்லை. தண்ணீர் விடா யால் செத்துப் போய்விடுவேன். தண்ணீர் கொடுங்களம்மா.''

யாருமே மூச்சு விடவில்லை. தாதிகள் எல்லாம் ஒரே உறக்கம் போலும்.

ஒரு பெண்ணுருவம் அந்த மூலையருகே வந்தது. ஆமாம் அவளும் ஒரு தாதிப் பெண்தான். அந்த ஆஸ்பத்திரியில், கால தேவன் கீறிய கோடுகள் பதிந்த அவன் முகத்தை உற் றுப் பார்த்தது. ஆனாலும் அந்த முகம் அவளுக்குச் சட்டென்று ஞாபகம் வந்தது. கிழவன் தண்ணீருக்காக வாயைத் திறந்தான்.

''ஐயா, பறைச்சி தொட்டுத் தண்ணீர் தந்தால் குடிப் பீர்களா? தாங்கள் பிராமணரல்லவா?'' என்றாள் அவள்.

''அம்மா, அம்மா குழந்தாய், பிராமணனானாலென்ன? பறை யனானாலென்ன? என் தாகத்திற்கு நீர் கொடம்மா! கொடிய மரணதாகம் நெஞ்சை அடைக்கிறது.''

அவள் ஒரு சின்னப் பாத்திரத்தில் இளஞ்சூடான நீரைக் கொண்டு வந்தாள். கிழவன் விடாய் அலாதியால் வாயைத் திறந் தான். ஆகா! உள்ளம் பூரிக்க - ஆத்மா சாந்தியடைய - மெல்ல மெல்ல நீரை வார்த்தாள் பெண்மணி.

''அம்மா, இந்த மரணவிடாயில் என்னைக் காப்பாற்றினாய். உன் குலம் நன்றாக வாழட்டும். நீ யாரம்மா?''

''ஐயா, என்னைத் தெரியாதா? நன்றாக உற்றுப் பாருங்கள்'' என்று குனிந்தாள் அந்தத் தாதி.

''ஞாபகம் இல்லையே?''

தன்நெற்றியை அவன் முகத்திற்கு நேரே பிடித்தாள். ''இதோ பாருங்கள் இந்த மறுவை. தண்ணீர் விடாய்த்து அன்றொருநாள் உங்கள் வீட்டில் வந்தேனல்லவா? தாகவிடாய் தாங்காமல் சிறுபிள்ளைத் தனத்தால் ஏதோ அனுஷ்டானச் செம்பைத் தொட்டு விட்டேனென்று நீங்கள் செம்பால் எறிந்த காயம் இதுதான்'' அவள் நெற்றியைக் காட்டினாள் கிழவனுக்கு.

கிழவன் முகம் காட்டிய குறியின் உணர்ச்சி, ஏதோ புதிதாய் இருந்தது. ''ஆமாம். கதிரன் மகளல்லவா? எப்படியம்மா இங்கே வந் தாய்? தாதியாகவும் வேலை பார்க்கிறாயே?'' ''ஆம் ஐயா. எல் லாம் அந்த கிறிஸ்தவ பெரியாரின் கிருபைதான். அன்றைக்கு நீங்கள் தீர்க்காத தாகத்தை அந்தப் பெரியார்கள் தீர்த்தார்கள். கல்வியு மளித்து இந்த நிலைமையில் வைத்தார்கள்.''

கிழவன் உள்ளம் வெடித்துவிட்டது. 'என் மரணதாகத்தை நீக் கிய கரங்களுக்கா அன்று இரத்தக்கறை ஏற்படவேண்டும்! இந்த விடாய் தானே அந்தப் பசலைக்கும் அன்று!'

''அம்மா என்னை மன்னி. ஜாதிக் கர்வத்தால் அன்று உன்னை எறிந்த என்னை மனப்பூர்வமாய் மன்னி!''

கிழவன் அவள் காலடியில் விழ எழுந்தான். பாவம்! அப்படியே தொப்பென்று விழுந்தான். விடாய் அடங்கியதோடு, அவன் கண் திறக்கவேயில்லை.



திருமதி ஜெயசித்ரா சிவமயூரனின் (சித்ர கலைமன்றம்) மாணவியும் குணரத்தினம் தம்ப தரியரின் புதல்வியுமான செல்வி தயாந்திகாவின் பரதநாட்டிய அரங்கேற்றம் எதிர்வரும் 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணிக்கு பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக எம்.ரி.வி.தொலைக்காட்சி நிறுவனத்தின் சந்தைப் படுத்தல் பணிப்பாளர் திருமதி லக்ஷ்மி அமரசேகரவும் கௌரவ விருந்தினர்களாக இலங்கை யின் உதவிப் பொதுமுகாமையாளரும் பிரதம சட்ட வல்லுநருமான முருகேசு கிரிதரன், கம்ப வாரிதி இ.ஜெயராஜ் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

செல்வி தயாந்திகா குணரத்தினம் பம்பலப்பிட்டி திருக்குடும்ப கன்னியர்மட மாணவி யும் யாழ்ப்பாணம் பிரபல வர்த்தகர் திரு.எஸ்.வி.முருகேசு அவர்களின் பேர்த்தியுமாவார்.

## கிளைவிட்டுக் காய்க்கும் தென்னை!



ஒரு வித்திலைத் தாவரங்கள் ஓங்கி, உயர்ந்து கிளைபரப்பாது வளர்வதே இயற்கை. எனினும் சிலவேளைகளில் அதற்குமாறாக - அதிசயமாக- அத்தாவரங்களும் கிளைகள் விட்டு வளர்வதுண்டு.

பனை, தென்னை போன்ற ஒருவித்திலைத் தாவரங்கள் பலஇடங்களில் கிளை பரப்பி ஓங்கி வளர்ந்து காய்கள் காய்ப்பதை இதற்கு முன்னரும் நீங்கள் கண்டிருக்கலாம்.

இங்கும் கிளைவிட்டு வளர்ந்து காய்த்துள்ள ஒரு தென்னையையே காண்கிறீர்கள்.

ஏழாலையில் செல்லர் ஜெயலிங்கம் என்பவரின் வீட்டில் 20 வருடங்களுக்கு முன்னர் நாட்டப்பட்ட இத்தென்னை நான்கு வருடங்களுக்கு முன்னர் கிளைவிடத் தொடங்கியது. இதுவரை இரண்டு கிளைகளுடன் இருந்த இம்மரம் தற்போது மீண்டும் பல கிளைகளைப் பரப்பத் தொடங்கியுள்ளது. (படம்: நேசன்)



கலாபூஷணம் விருது பெற்ற சிற்ப சிகாமணி சீ.செந்தூர்ராசா கலைநகர் நேதாஜி சனசமூக நிலையத்தினரால் அண்மையில் கௌரவிக்கப்பட்டார்.

நிலையத் தலைவர் பொ.காங்கேயநாதன் தலைமையில் நடைபெற்ற பாராட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வலி.மேற்கு பிரதேச செயலர் திருமதி தே.பாபு விழா நாயகனுக்கு பாராட்டு மடல் வழங்கிக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்வையில் வறிய பிள்ளைகள் கற்கும் ஒரு பாடசாலையின் இன்றைய நிலை

★ சொந்தமான கட்டடம் இல்லை
★ தனியார் வீட்டில் கற்றல் கற்பித்தல்
★ மலசலகூட வசதிகள் இல்லை
★ மழை பெய்தால் ஒழுகும் கூரை
★ அடிப்படை வசதிகள் எதுவும் இல்லை

வல்வெட்டித்துறையில் மிகப்பழமையான பாடசாலைகளில் ஒன்றாக விளங்குவது அமெரிக்க மிஷன் அரசினர் தமிழ்க் கலவன் (அரியக்குட்டி) பாடசாலையாகும்.

1890ஆம் ஆண்டளவில் பொதுமக்களின் பங்களிப்புடன் அமெரிக்க மிஷனரிமார்களால் இப்பாடசாலை கட்டப்பட்டது.

மிகவும் வறிய குடும்பங்களைச்சேர்ந்த பிள்ளைகளுக்கு இப்பாடசாலை ஒருவரப்பிரசாதமாக விளங்கி வந்துள்ளது.



தரைமட்டமாக்கப்பட்ட பாடசாலைக் கட்டடத்தின் ஒரு பகுதி

அதிபர் ஒருவர் உட்பட மூன்று ஆசிரியர்களைக் கொண்ட இப்பாடசாலையில் முதலாம் வகுப்பிலிருந்து 5ஆம் வகுப்பு வரை பாடங்கள் நடத்தப்படுகின்றன. தற்பொழுது இப்பாடசாலையின் அதிபராக பூ.சக்திவேல் கடமையாற்றி வருகிறார்.

இப்பாடசாலைக் கட்டடம் மிகப் பழமையானதாகவும் வசதிகள் ஏதும் அற்ற நிலையில் பாடசாலை இயங்கி வருவதையும் அவதானித்த 'நிக்கொட்' நிறுவனம் பாடசாலைக் கட்டடத்தை உடைத்து அப்புறப்படுத்திவிட்டு முழுதும் புதிய கட்டடமாக அமைத்துத் தருவதற்கு முன் வந்தது.

ஆனால், இதுவரை ஆக்கபூர்வமான எந்தப் பணிகளும் நடைபெற்றதாகத் தெரியவில்லை. யுத்தத்தினால் சேதமடைந்த ஒரு தனியார் வீட்டில் மலசலகூட வசதிகள் அற்ற நிலையில் இயங்கி வருகின்றது.

**பாடசாலை அதிபர் தெரிவித்த விவரம்**

இப்பாடசாலையின் நிலைமைபற்றி அதிபர் பூ.சக்திவேலிடம் கேட்டபோது அவர் கூறியதாவது:

இப்பகுதியிலேயே மிகவும்பழமைவாய்ந்தது இப்பாடசாலை. கற்றல் கற்பித்தல்களுக்கு ஏற்ற நிலையில் இது இல்லை. பிள்ளைகள் மிகவும் சிரமமான சூழ்நிலையில் கற்றலை மேற்கொள்கின்றார்கள்.

இப்பாடசாலையின் மோசமான நிலைமையை அறிந்த நாடாளுமன்ற உறுப் பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் மேற்கொண்ட முயற்சியின் பயனாக நிக்கொட் நிறுவனம் முன்வந்து 2004 ஆம் ஆண்டு புனர்நிர்மாணத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

ஆனால், அதே ஆண்டு டிசெம்பரில் ஆழிப்பேரலை அனர்த்தம் காரணமாக திருத்த வேலைகள் தாமதமடைந்தன. மீண்டும் பெருமுயற்சியின் பலனாக புதிதாக மாடிக்கட்டடம் கட்டுவதற்கான ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டது.

என்றாலும் உடனடியாக பாடசாலைக் கட்டடங்களையும் உபகர ணங்களையும் அகற்ற முடியாத சூழ்நிலை தோன்றியது. காரணம் சுனாமியால் பாதிக்கப்பட்ட வல்வை றோமன் கத்தோலிக்க அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையையும் எமது பாடசாலையுடன் சேர்த்து இயக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

இதன் காரணமாக எமது பாடசாலையும் வல்வை றோ.க. அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையும் ஷெல் தாக்குதலால் சேதமடைந்த ஒருதனியார் வீட்டிற்கு மாற்றப்பட்டன.


அதனைத்தொடர்ந்து எமது கட்டடங்கள் பிரிக்கப்பட்டு அதன் ஓடுகள், மரங்கள் அனைத்தும் வடமராட்சி கிழக்கில் உள்ள அம்பன் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலைக்கு கல்விப்பணிப்பாளரின் உத்தரவின் பேரில் வழங்கப்பட்டன.

ஏனைய கட்டடத் தொகுதி இடித்த பொருள்களை அகற்றுவதற்கு எதுவித நிதியும் இல்லாதபோது பாடசாலை அபிவிருத்திச் சங்க உதவியுடன் இடிபாடு சேதனப் பொருள்கள் அகற்றப்பட்டன.

பின்பு 2006 ஆம் ஆண்டு மே மாதம் 3ஆம் திகதி பாடசாலையின் புதிய கட்டடத்திற்கான அடிக்கல் சம்பிரதாயபூர்வமாக நாட்டப்பட்டது.

**அடிக்கல் நாட்டியும் ஏ-9 பாதை மூடியதால் வேலைகள் முடக்கம்**

அடிக்கல் நாட்டு விழா வைபவத்தில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பி னர் எம்.கே. சிவாஜிலிங் கம், வடமராட்சி கல்விப் பணிப்பாளர், வ.செல்வராஜா, வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலை அதிகாரி கே.மயிலே றும் பெருமாள் ஆகியோர் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது.



தனியார் வீடொன்றில் இயங்கும் பாடசாலை

மேலும் ஏ-9 பாதை மூடியதன் காரணமாக கட்டடப் பொருள்களின் விலை அதிகளவில் அதிகரித்து விட்டமையால் கட்டட ஒப்பந்தகாரர் கட்டட வேலைகளைத் தொடர முடியாமல் சென்றுவிட்டார்.

இதன் காரணமாக இன்று எவரது உதவியுமற்ற நிலையில் பாடசாலை நடைபெறுகிறது. மலசலகூட வசதிகள் இல்லாமலும் மாணவர்கள் கல்வியை நல்ல முறையில் தொடர முடியாமலும் உள்ளது.

மழைகாலம் வந்தால் பாடசாலை நடைபெறும்வீட்டின்கூரைவழியாக மழைநீர் வடிந்தோடும். கற்றல், கற்பித்தல் பணிகளைச் சீராக மேற்கொள்ள முடியாத நிலை தோன்றும். ஆசிரியர்கள் திட்டமிட்டு தம் பணியை செய்யமுடியாமல் போகும் என்றார்.

**வல்லழகனார்**

# எவரையும் அழிப்பது சுலபம் மீளவும் உயிர்ப்பிக்க முடியுமா?

## பகவான் புத்தர் வாழ்வின் சம்பவம் போதிக்கும் பாடம்



புத்தபெருமான் ஒரு முறை காட்டு வழியாகப் பயணம் சென்று கொண்டிருந்தார். அந்த வழியாகத் தொடர்ந்து போக வேண்டாம் என்று பலர் அவரைத் தடுத்தனர். காரணம் கேட்டார் புத்தர்.

காட்டிலே 'அங்குலிமல' என்கிற கொடூரமான கொலைகாரன் இருக்கிறான். ஈவு இரக்கமின்றி எவரையும் கொன்று அழிக்கும் கொள்ளைக்காரன் அவன் என்று எச்சரித்தார்கள் அவர்கள். தன்னால் கொல்லப்பட்டவர்களின் கைவிரல்களை மாலையாகக் கோர்த்து கழுத்தில் அணிந்திருந்தவன் என்பதால் அங்குலிமல என்று அவன் அழைக்கப்பட்டான்.

''அப்படியானால் அவனை அவசியம் நான் பார்க்க வேண்டும். எனக்கு அங்குதான் வேலை இருக்கிறது'' என்று கூறிய புத்தர், தன்னந்தனியாகக் காட்டுக்குள் போனார்.

காட்டில் கொடூரமான விழிகளைக் கொண்ட அவ்வரக்கன் கத்தியுடன் புத்தரைக் கொல்ல வந்தான். கருணை பொழியும் கண்களுடன் அவனைப் பார்த்தார் பகவான் புத்தர்.

''அங்குலிமல.... உன் கைகளால் சாவதை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்கிறேன் அதற்குமுன் எனக்கு ஒரு சின்ன உதவி செய்யவேண்டும்'' என்று கூறிய பகவான் புத்தர் அருகில் இருந்த மரத்தைக் காட்டி ''அந்த மரத்தின் இலைகள் சிலவற்றை எனக்கு பறித்துத் தா'' என்றார்.

அன்பின் ஆளுமைக்கு கட்டுப்பட்டு இலைகளைப் பறித்து புத்தர் முன் போட்டான் அங்குலிமல.

சிரித்தபடி பகவான் அவனைப் பார்த்து நன்றி இவற்றை மீண்டும் மரத்தில் ஒட்ட வைத்துவிடு' என்றார்.

திகைத்த அங்குலிமல அது எப்படி முடியும்? என்று கேட்டான்.

''அன்பனே... ஒன்றை அழிப்பது எல்லோராலும் முடியும். ஆனால், ஆக்குவது முடிகிற காரியமல்லை. எல்லோரையும் அழிக்கும் அற்பமான வேளையில் நீ பெருமைப்பட என்ன இருக்கிறது'' என்றார் புத்தர்.

அவ்வங்குலிமல திருந்தி பௌத்த சங்கத்தில் சேர்ந்து துறவியானான்.

யாரையும் அழிப்பது சுலபம் அதில் மார்தட்டுகிற வீணர்களாக நாம் இருக்க வேண்டாமே.

**வசந்தராணி சண்முகம்**
*(யாழ்ப்பாணம்).*

# சொந்தக் கட்டடம் இல்லாது இயங்கும் சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரி

## காணி அல்லது கட்டடத் தொகுதியை எவரும் முன்வந்து வழங்குவார்களா?

யாழ்ப்பாணம் லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக்கல்லூரி 2003ஆம் ஆண்டு 75ஆவது ஆண்டு நிறைவைப் பூர்த்தி செய்து பவளவிழாவைக் கண்ட ஒரு கல் லூரியாகும். 1925ஆம் ஆண்டு டாக்டர் ஜே.வஸ்தியாம்பிள்ளை என்னும் சமூகப் பெரியவரால் நிறுவப்பெற்ற இக் கல்லூரி இன்று வரை பன்னிரண்டு அதிபர்களைக் கண்டுள்ளது. இலங்கையின் முதலாவது ஆயுள்வேத மருத்துவக் கல்லூரி எனப் பெருமையும் புகழும் பெற்ற இக்கல்லூரி இன்றுவரை பாரம்பரிய மருத்துவத்துறை யில் பயிற்சி பெற்ற பல சித்தாயுள்வேத வைத்தியர்களின் பிள்ளைகளுக்கும், சந்ததியினருக்கும் வைத்திய அறிவையும் தொழில் முறைப் பயிற்சியையும், மருந்து உற்பத்தித் திறனையும் வழங்கி வந்த ஒரு கல்லூரியாகும். இதன் பின்னரே இலங்கை அரசாங்கத்தால் 1929ஆம் ஆண்டு கொழும்பு, கொட்டா வீதியில் ஒரு சுதேச மருத்துவக் கல்லூரி நிறுவப்பெற்றது. டாக்டர் ஜே. வஸ்தியாம்பிள்ளை யாழ்ப்பாண பெருமக்கள் சிலரையும், சித்தாயுள்வேத வைத்தியர்கள், பரம்பரை மருத்துவர்கள் பலரையும் ஒருங்கே கூட்டி வட இலங்கை சுதேச வைத்திய சபை ஒன்றினை 1934ஆம் ஆண்டு உருவாக்கினார். இந்த இயக்குநர் சபையானது காலத்திற்கு காலம் பல புதிய வைத்தியர்களையும், அறிஞர்களையும் இணைத் துக்கொண்டு இக்கல்லூரியை நிர்வகித்து வந்தது.

**மக்கள் மன்றம்**

இயக்குநர் சபை மாற்றக் காலங்களில் வளர்ச்சிப் படிகளில் தடங்கல் ஏற்படாது நடந்து வந்தபோது ஒரு சில கஷ்டமான சம்பவங்களினால் 1980இன் பின்னர் நிர்வாக சபையில் ஏற்பட்டுள்ள பிளவுகள் காரணமாக யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம் மூன்று சட்டத்தரணிகள் கொண்ட ஓர் ஆணைக்குழுவை நியமித்து கல்லூரி நிர்வாகத்தை நிர்வகித்து வந்தனர். இன்று இக்கல்லூரியை வட இலங்கை சுதேச வைத்திய சபை மீண்டும் பொறுப்பேற்று நிர்வகித்து வருகின்றது. வடக்கு, கிழக்கு மாகாண சபை இக்கல்லூரி இயங்குவதற்குரிய மானியத்தை தற்போது வழங்கி வருகின்றது.

இவ்வகையில் நூற்றுக்கணக்கான வைத்தியமணிகளை உருவாக்கி நாட்டின் மூலை முடுக்குகளில் எல்லாம் பாரம்பரிய வைத்திய முறைக்கு உயிர் அளித்து வருகின்றளவில் இக்கல்லூரிக்கு 75 ஆண்டுகள் கழிந்த நிலையிலும் சொந்தமான காணியோ நிலையான கட்டட வசதிகளோ இன்றி நாட்டின் யுத்த சூழ்நிலைகளாலும் பெரும் இடர்பாடுகளைச் சந்தித்துக் கொண்டு இருப்பது வேதனைக்குரிய விடயமாகும். இங்குள்ள வைத்திய மாணவர்கள் எந்த அடிப்படை வசதிகளுமின்றி கல்வியைத் தொடர வேண்டிய நிலையில் இருப்பதும் மிகவும் துரதிர்ஷ்டவசமானது. இன்று இத் தனியார் மருத்துவக் கல்லூரியை இயக்குகின்ற நிறுவனமாகிய வட இலங்கை சுதேச வைத்திய சபை வழக்கிலே சிக்குண்டு அக்கட்டடத்தையும் இழக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பது மிகுந்த மனவருத்தத்தை தருகின்றது.

அரசாங்கம் வழங்கும் மானியம் கல்லூரி விரிவுரையாளர்கள், ஊழியர்களுக்கே வழங்கப்படுகின்றது. இந்நிலையில் அடிப்படை வசதிகளுடன் கல்லூரிக்கென சொந்தமான ஒரு காணியையோ கட்டடத்துடன் கூடிய நிறுவனத்தையோ கொள்வனவு செய்யும் அளவில் கல்லூரிக்கு நிதி வசதிகளும் கிடையாது. எனவே இலங்கையின் ஆயுள்வேத மருத்துவக் கல்வி பாரம்பரியத்தில் நீண்டகாலம் பணியாற்றி வருகின்ற இக்கல்லூரியை தொடர்ந்தும் பேணிப் பாதுகாத்து அடுத்த வைத்திய தலைமுறையினரிடம் கையளிப்பது சித்த ஆயுள்வேத சமூகத்தினதும் வைத்தியர்களை உருவாக்கும் பணியில் பேரார்வமுள்ள பெரியவர்களினதும் இன்றியமையாத கடமையாகும்.


எனவே தொடர்ந்து இக்கல்லூரி இயங்குவதற்கேற்றவாறு ஒரு காணியையோ அல்லது கட்டடத்துடன் கூடிய ஒரு நிலையத்தையோ கல்லூரிக்கு அன்பளிப்புச் செய்வதற்கு தர்ம வள்ளல்களும் அன்பர்களும் ஆதரவாளர்களும் பெருதவி புரிய முன்வர வேண்டும் என அன்புடன் கல்லூரிச் சமூகம் வேண்டுகோள் விடுக்கின்றது. எங்கட்கு இத்தகைய தொரு மாபெரும் உதவி கிடைக்குமானால் அவர்களை சித்த ஆயுள்வேத வைத்திய சமூகம் நன்றிக்கடனுடன் பணிந்து போற்றி வரவேற்கும்.

எனவே காலத்தால் அழியாத இத் தருமப் பணிக்கு வசதிபடைத்த பெருவள்ளல்கள் உதவி புரியமுன்வர வேண்டுமென அன்புடன் எதிர்பார்த்து காத்திருக்கின்றது. ★

வைத்திய கலாநிதி
**பொன்.இராமநாதன்**
MD, Ph.D.,
தலைவர்/ வட இலங்கை சுதேச வைத்திய சபை
(சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CIMA



# இணக்கமான கொடுப்பனவு திட்டங்கள் அது இலகுவானதாக இருக்க மாட்டாது.

நீங்கள் வர்த்தகத்தில் ஒரு பதவியைத் தீர்மானித்தால் சீமாவை (CIMA) பின்பற்றுங்கள். அது ஒரு விசேடமான தெரிவு. தற்போது அது இலகுவானதும் இணங்கக் கூடியதுமான தெரிவும் கூட.

புதிய, தற்போதுள்ள 'கார்ட்' உறுப்பினர்களுக்கென சுலபமான, இணக்கமான நம்பகத் .தன்மையான 'கார்ட்' கொடுப்பனவுத் திட்டங்களை வழங்க, சீமா (CIMA) ஸ்ரீலங்கா முதன் முறையாக அமெரிக்கன் எக்ஸ்பிரஸ், சம்பத் வங்கி, செலான் வங்கி ஆகியவற்றை ஒருங்கே இணைத்துள்ளது. இத்திட்டங்கள் மூலமாக பதிவு, சந்தா, பரீட்சைக் கட்டணங்களைச் செலுத்தலாம்.

சீமா(CIMA) ஒரு பாரிய முதலீட்டு நிறுவனமாகும். வெளிப்புற வர்த்தக சாதனைகளுக்காக, தனது உறுப்பினர்களை முழுமையாக தயார் படுத்தும் ஒரேயொரு பொறுப்பான நிறுவனம் எமது நிறுவனமாகும். சீமாவின் கல்வித்தரம் உலகின் மிகப் பெரிய, சிறந்த வேலைகொள் நிறுவனங்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. கணக்கியல் கல்வித்தரத்தை அந்நிறுவனங்கள் பெரிதும் மதிக்கின்றன.
சீமாவை (CIMA) தெரிவு செய்வதன் மூலம், விருதுக்கான மகத்துவத்துக்கான ஒரு பதவியை நோக்கி நீங்கள் முதல் அடியை எடுக்கிறீர்கள்.

தற்போது அதை அடையாளப்படுத்த சிரமமில்லை அப்படித்தானே?!

நம்பக அட்டை(கார்ட்) கொடுப்பனவுத் திட்டங்கள் தொடர்பான மேலதிக விவரங்களுக்கு தொடர்பு கொள்வதற்கு:

Genesys

Banking partners of the CIMA flexible payment plan

NationsTrust Bank | American Express | SampathBank WE PRESENT YOUR FUTURE | SEYLAN BANK PLC The bank with a heart

CIMA Sri Lanka Division, 356 Elvitigala Mawatha, Colombo 5
T: 2503880 | F: 2503881 | E: colombo@cimaglobal.com | www.cimaglobal.com

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## துரித பிரதியாக்கற் சேவை

விசேட அடையாள அட்டைக்கான புகைப்படங்களை உடனுக்குடன் படம் பிடித்து பிரதியாக்கம் செய்து தருகின்றோம்.

**மூர்த்தி லேசர் டியிற்றல் கலர் லாப்**
யாழ்ப்பாணம். (64145)

## லங்கா சிமெந்து நிறுவனம்
**லான்ட் மாஸ்ரர்**
பெட்டியுடன் விற்பனைக்கு உண்டு

எமது நிறுவன கொக்குவில் விற்பனை சாலையில் பாவனையில் உள்ள லான்ட் மாஸ்ரர், பெட்டியுடன் விற்பனைக்கு உள்ளது.
வாகனத்தின் தன்மை EMEI 7A 2W 7.7.HP (CHINA) ஆங்கில இலக்கத்தகடு.

05.09.2007 ஆம் திகதிக்கு முன்பாக கேள்விப்பத்திரத்திற்கான விண்ணப்பப்படிவத்தினை மீளப்பெற முடியாத 100/- செலுத்தி, விண்ணப்பத்தினைப் பெற்று பூர்த்திசெய்து நிறுவனத்தின் இணுவில் காரியாலயத்தில் ஒப்படைக்கவும்.

*வாகனத்தைப் பார்வையிடும் நேரம்*
*அலுவலக நாள்களில்*
**காலை 8.30 மணி முதல் பி.ப. 2.30 மணிவரை.**
தொடர்புகளுக்கு:- **தொலைபேசி இல.222 4043**
(64127)

## விமானப் பொதிகள் சேவை

*உங்கள் பொதிகள் யாழ். - கொழும்பு அல்லது கொழும்பு - யாழ். தினசரி விமானம் மூலமாக உடனடியாக அனுப்பி வைக்கப்படும். கிளியரன்ஸ் இல்லாத பொருள்களுக்கு MOD பெற்று உத்தரவாதத்துடன் அனுப்பி வைக்கப்படும். உங்களுக்குத் தேவையான பொருள்கள் கொழும்பில் இருந்து தருவித்து வழங்கப்படும். பூதவுடல்கள் ஏற்றுக்கொள்ளப்படும். தேவை ஏற்படின் விமானம் சாட்டர் செய்து கொடுக்கப்படும்.*

**கொழும்பு - யாழ். 1 Kg 250/=** | Sub Dealers *தேவை* | **யாழ். - கொழும்பு 1 Kg 200/=**

**EURO GROUP OF COMPANIES**
*35, Station Rd., Mount Lavina.*
*Tel.: 0773846998, 0114542190 Fax.:0114542360*
*Wellawatte Branch: 11,Vihara Lane, Colombo 06.*
*Tel.: 0114969116, 0773561891*
*Jaffna Branch: 22, Wyman Road, Jaffna.*
*Tel.: 021 222 3974, 0774207963*
(J-53451)

## சேவல் விற்பனைக்கு

1½ Kg நிறையுடைய சேவல் கோழி மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு.
தொடர்பு:- NEW R.S.K. FARM,
மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில் (64107)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், செவ்வாய்க் குற்றமுள்ள, 25 கிரகபாவம் உடைய, அத்தம் நட்சத்திரம், 30 வயது, பொறியியலாளர் மணமகனுக்கு படித்த மணமகள் தேவை. விளம்பர இல. 3003,
மே/பா, உதயன். (64122)


## வீடு விற்பனைக்கு

*கோப்பாய் தெற்கு, இராஜவீதியில் மாஸ்ரர் கடைக்கு அண்மையில் 5 பரப்பு காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு*
தொடர்பு:
சி.பாலசிங்கம், இராச வீதி,
கோப்பாய் தெற்கு. (63913)

## கோழிக்குஞ்சு விநியோகம்

BAHIRAHA புறொயிலர் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு:-
- ★ ராஜீவ், நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
- ★ தாரகை, 1ஆம் கட்டை, பருத்தித்துறை.
- ★ மதுரா, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
- ★ ராஜ் ஸ்ரோர், பிரதானவீதி, நெல்லியடி.
- ★ திருமகள் களஞ்சியம், சிவலிங்கப்புளியடி.
- ★ P.ரவி, தாமர் சுந்தோர் வீதி, யாழ்ப்பாணம்.

T.P No 222 2867, 222 3529 (64123)




**CB Computer Academy**
Station Road, Kondavil. ☎:-021-4590291
Batch I : 26.08.07 (Sun)
Batch II : 29.08.07 (Wed)
*கட்டணச் சலுகை பற்றிய விபரங்களுக்கு நேரில்!*

## தவறிவிட்டது

சாவகச்சேரி பெருங்குளம் சந்தி றோயல் பேக்கரியைச் சேர்ந்த கார்த்திகேசு சுரேஸ் என்பவரது NPHV 9685 இலக்க பொக்ஸர் மோட்டார் சைக்கிளின் ஆவணங்கள் கடந்த 22.08.2007 அன்று சாவகச்சேரிக்கும் யாழ்ப்பாணம் ரெலிகொம் அலுவலகத்திற்கு மிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்படி முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

## யா/விக்னேஸ்வரக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்,
(கரவெட்டி)
### வருடாந்தப் பொதுக்கூட்டம்

இடம் :- கல்லூரி மண்டபம்
காலம் :- 02.09.2007 (ஞாயிறு) மு.ப. 9 மணி

1. பிரேரணைகள் இருப்பின் 31.08.2007இற்கு முன் சமர்ப்பிக்கவும்.
2. வருட அங்கத்தவர்கள் இவ்வருட சந்தாப்பணம் செலுத்திப் புதுப்பித்துக் கொள்ளவும்.

தங்களுக்கு எழுத்தறிவித்த, தங்களை உருவாக்கிய கல்லூரியின் மேம்பாட்டுக்கு உதவ அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்போடு வேண்டுகின்றோம்.

லயன் க.தணிகாசலம், தலைவர். 021 226 5158 க.ரவிகுமார், செயலாளர். (64064)

## IELTS

**British Council or AC BT Centres**

Essential English Language examination for higher studies, work or migration purposes in UK, Australia, New Zealand Canada, USA, etc.,
**Best Lecturers; Modern Teaching facilities; Listening Facillities Speaking Practice**

பயிற்சிப் பரீட்சைகளில் Band - 8 எடுக்கும் வரை தொடர்ந்து Practice செய்யலாம். பரீட்சை எடுக்கப்போகும் நாள்வரை எமது நிலையத்தில் Listening Practice / Practice Test போன்றவற்றைத் தொடர்ந்து கட்டணம் இன்றி மேற்கொள்ளலாம்.

**COURSE SCHEDULE**

Duration: 12 Weeks (Saturday & Sunday)
Time : 8.00 a.m - 11.00 a.m / 11.00 a.m - 1.00 .p.m
Commencement 01.09.2007
Registration :Before 31st of August 2007

Contact or Call over at
**BRITISH COLLEGE OF ENGLISH**
143,Adiyapatham Road, Thirunelvely.
T.P:0779934783

## கலாலயா
*பயிற்சியகம்*
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். [ பெருமாள் கோயிலுக்கு அண்மையில் ]
மகளிருக்கான துரித குறுகிய கால பயிற்சிகள்

- ★ **3 மாத கால** கேக் ஐசிங், உணவு தயாரித்தல், கூந்தல் அலங்காரம் Fabric Painting, பூ வேலை, கைவேலை பயிற்சிகள்.
  மேற்படி பயிற்சிக்காலத்தின் நடுப்பகுதியில் **Facial** அழகுக்கலை நடைபெறும்.
- ★ **இருவார கால** சாறி பிளவுஸ், பஞ்சாபி, தைத்தல்
  (இப்பயிற்சிகளுக்கு இரு வாரங்களுக்கு ஒரு முறை புதிய அனுமதிகள் தொடர்ந்து வழங்கப்படும்)
- ★ புதிதாகத் தையல் பழக விரும்புவோருக்கான **6 மாத கால** தையல் வகுப்புகள்

*சனி, ஞாயிறு வகுப்புகள் ஆரம்பம் :- 01-09-2007*
*கிழமை நாள் வகுப்புகள் ஆரம்பம்:- 03-09-2007*

☞ *மேலும் விபரங்களை வியாழன், வெள்ளி தவிர்ந்த ஏனைய நாள்களில் பி.ப 1.00 மணி வரை நேரில் அறிந்து கொள்ளலாம்.*
**பதிவாளர்.**

# BE A DOCTOR


**Graduate in Eastern Europe**
**Doctor of medicine MD**
English Medium

Recognized by SRI LANKA MEDICAL COUNCIL

உள்நுழையும் அனுமதி உத்தரவாதம்
அழைப்புக் கடிதம், அனுசரணைக் கடிதங்கள், வங்கிக் கணக்குக் கூற்று, விசா நேர்முகப் பரீட்சை எவையும் அவசியமில்லை

- PATHE ACADAMY அனுமதிக்கு விண்ணப்பித்த நாளிலிருந்து 20 நாட்களுக்குள் கற்கைநெறி அனுமதியும் விசா அனுமதியும் பெற்றுத்தரப்படும்.
- கல்விக்கான கடன்வசதி 5 நாள்களுக்குள் ஒழுங்கு செய்து தரப்படும்.
- தங்குமிட வசதி, இணையத்தள வசதி, பொழுதுபோக்கு வசதி, நூலக, ஆய்வுகூட வசதிகள், செயல்முறைக்கல்வி மற்றும் பரீட்சைக் கட்டணம் யாவும் இலவசம்.
- போக்குவரத்து, உணவு கட்டணங்கள், விசேட சலுகை அடிப்படையில்.
- இலங்கையிலும், உலகின் ஏனைய நாடுகளிலும் 200 இற்கும் மேற்பட்ட இலங்கை மாணவர்கள் படித்துப் பட்டம் பெற்றபின் தொழில் பார்க்கிறார்கள்.
- இலங்கைக்கான பிரதிநிதிகள் குழு உங்களுக்கு உதவவென 24 மணிநேரமும் காத்திருக்கின்றனர்.
- வெளிநாட்டவர்களுக்கு ஐரோப்பிய நாட்டில் கற்க மிகவும் பாதுகாப்பான இடம். (ஆசிய சிநேக சுற்றாடல்
- பிரிட்டன், அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, ஜேர்மனி மற்றும் இலங்கை ஆகிய நாடுகள் உட்பட உலகின் ஏனைய பல நாடுகளாலும் அங்கீகரிக்கப்பட்டது.
- ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி மற்றும் ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்கும் பருவகால விடுமுறை வேளையில் சென்று பகுதிநேர தொழில் பார்க்கும் வாய்ப்பு.
- பட்டம் பெற்ற பின்னர் ஐரோப்பாவில் குடியேற வாய்ப்பு.
- வருடாந்தக் கட்டணம் இரு தவணைகளில் செலுத்தும் வாய்ப்பு.

NOW 0% INTEREST INSTALLMENT PLAN BY MAJOR CREDIT CARDS

தமிழில் தொடர்புகொள்ள: 0773017883

PATHE ACADAMY மூலம் அனுமதி பெற்ற மாணவர்கள் விபரம், ஏனைய தகவல்களை எமது இணையத்தள முகவரியிலும், அலுவலகத்தில் நேரிலும் பெற்றுக்கொள்ளலாம்.

The Programme is executed in par with ACT 16 Exams syllabus
Transfer from other universities Engineering (IT) other courses also available

**Register Today, Fly Immediately! For admissions & Inquires 0773017883**

**PATHE ACADEMY**
Overseas Student Placement Department
37, School Lane, (Entrance from duplication Rd.) Colombo-03
Tel: 5377752, 2502012, 2591271 www.patheacademy.org


உ

## திருமண அழைப்பு

*அன்புடையீர்!*

*நிகழும் மங்களகரமான சர்வஜித் வருடம் ஆவணித் திங்கள் 10 ஆம் நாள் (27.08.2007) திங்கட்கிழமை மு.ப. 9.30 மணிமுதல் 10.35 மணிவரையுள்ள திருவோண நட்சத்திரமும் துலாம் லக்கினமும் அமிர்தசித்தயோகமும் கூடிய சுபமுகூர்த்த சுபவேளையில்*

எமது புத்திரன் திருவளர் செல்வன் **நிமலகுமார்** அவர்களுக்கும்



எமது புத்திரி திருவளர் செல்வி **லிந்துஜா** அவர்களுக்கும்

*இறைவன் திருவருள் துணை கொண்டு ஸ்ரீ காமாட்சி அம்மாள் கல்யாண மண்டபத்தில் (நாச்சிமார் கோயில்) திருமாங்கல்ய தாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள், தங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்துத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.*

*இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:*

திரு. திருமதி சதாசிவம்
15/39, மாரி அம்மன் வீதி,
திருநெல்வேலி.

திரு. திருமதி சிவராசா
31/1, சிவப்பிரகாசம் வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

குறிப்பு: இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும். (64120)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசம் போற்றும் தெல்லிநகர் துர்க்கை அம்மா!

*நம்பினார் கெடுவதில்லை நான்கு மறைத் தீர்ப்பு*
*அம்பிகையை சரண்புகுந்தால் அதிகவரம் பெறலாம்.*

அருள்நிறைந்த அம்பாளின் திருக்கோயில். அகில மெல்லாம் அறிந்த பெருங்கோயில். தெல்லிநகர் துர்க்கை அம்மன் என்றால் மிகையாகாது. இற்றைக்கு முன்னூறு ஆண்டுகளுக்கு முன் காசியில் தவமிருந்த கதிர்காமர் என்ற பரமஞானியின் கரங்களில் உறைந்த அம்பாள் தெல்லிப்பழை உளுகோடைப் பதியில் இலுப்பஞ்சோலையில் அமர்ந்து அருட்கோயிலாக பரிணமித்தாள்.



இயற்கை அழகுச் சோலையில் அமர்ந்த அம்பாளின் திருவருள் பிரவாகம் பெற்றது. தன்னருளை உலகுக்கு அறிவிக்க இத்தரணியில் தங்கமகள் தனை தோற்றுவித்தாள். கடந்த நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக இத்திருக்கோயிலை தேசம் போற்றும் பெருங்கோயிலாக வளர்த்தெடுத்த பெருமை தங்கமகளாய் உதித்த அன்னை. சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களைச் சாரும். அல்லும் பகலும் அனைவரதும் அம்மையாரின் அயராத முயற்சியால் குடிசையாக இருந்த கோயில் இன்று பெரும் கோபுரம் மாடமாளிகையோடு துர்க்காபுரம் என்ற அருள் நகரையே தோற்றுவித்துள்ளது.

காலம் தவறாது பூசை, அடியார்கள் அனைவரும் அமர்ந்து அமைதியோடு வழிபடும் ஒழுங்கு, அடையாள வாயிலாக வழங்கும் அன்னதானச் சிறப்பு, விம்மி அழுது வீதியில் நின்று கால்பட்டால் வினையகன்று உள்ளம் உவகை கொள்ளும். உண்மை யாவும் இத்திருக்கோயிலை நாடிச் செல்ல பக்தரை ஈர்க்கும் எண்ணிலாத பக்தர்கள் எங்கோ இருந்து தினமும் அம்பாள் திருத்தலத்தை நாடி வருகிறார்கள். பாடிப்பரவி கூவி அழைத்துக் குறைகளைக் கூறுகிறார்கள். தேடிவரும் பக்தர்கள் எல்லாம் தேவியின் அரவணைப்பால் ஆட்கொள்ளப்பட்டு மீள அடியவராய் சரணாகதி அடைந்து வாழ்வது வழக்கமாகிவிட்டது.

அற்புதம் நிறைந்த அம்பாளின் பக்தர்கள் அள்ளிக் கொடுக்கிறார்கள். காலத்தின் தேவையறிந்து துன்பம் போக்கும் துர்க்கை அம்பாளின் பெயரால் அன்பர்கள் வழங்கிய காணிக்கைகள் அறப்பணிக்குப் பயன்படுத்தும் மரபு துர்க்காதேவி தேவஸ்தானத்தால் தோற்றுவிக்கப்பட்டது. அம்பாளின் திருவருளால் ஆலயம் சமூக நிலையமாயிற்று. அறப்பணிகள் விரிந்தன.

*1.துர்க்கா புரம் மகளிர் இல்லம்*

ஆதரவற்ற சிறுமிகளின் அடைக்கலம் வழங்கும் ஒப்பற்ற ஆலயம் இவ்வாண்டு வெள்ளி விழக்கண்டு பெருமை பெற்றுள்ளது. பலநூறு பெண்கள் பலன் பெற்று பல்கலை பெற்று அறிஞராகி ஆலயத்தில் பெருமை சேர்த்துள்ளனர்.

*2.சிவத்தமிழ்ச்செல்வி அன்னையர் இல்லம்*

அன்னையர்க்குப் புகலிடம்.

*3. சிவத்தமிழ்ச்செல்வி சைவத்தமிழ் ஆய்வு நூலகம்*

அறிவுலகைக் காப்பதற்கு அமைந்த நிலையம்.

*4.அன்ன சத்திரம்*

அடையாள வாயிலாக அன்னம் பாலிக்கும் அருந்தொண்டு.

*5.அன்னபூரணி மண்டபம்*

இல்லத்தில் நுழைய உதவும் இனிய மண்டபம்.

*6.துர்க்காதேவி யாத்திரிகர் விடுதி.*

ஊர் தேசம் கடந்து வரும் பக்தர்கள் தரித்து நின்று இளைப்பாறல்.

*7. திருமகள் அழுத்தகம்*

ஆன்மீக நூல்கள், ஆலயப்பிரசுரங்கள், அருள் ஒளி மாத வெளியீடு மலர உதவும் சாலை.

*8.நல்லூர் ஸ்ரீதுர்க்காதேவி மணி மண்டபம்*

நல்லைக்கந்தன் அடியார்க்கு அன்னம் பாலித்தல், ஆன்மீக விழா அரங்கு, திருமண மண்டபம், குருபூசை வழிபாடு, துர்க்காதேவி அறநெறிப்பாடசாலை.

துர்க்காபுரம் கோசாலை அறம் போதிக்கும் கல்விச்சாலை கோமாதா குலமாதா எனப் போற்றி பசுக்களை வளர்த்து பாதுகாத்தல்.

மேற்குறித்த பணிகளுக்கு அப்பால் நோயால் நொந்து போனவர்களுக்கு, கல்விச்சாலை, வைத்திய சாலை, வலுவிழந்த நிலையங்களுக்கு உதவும் பணிகள் ஆலயத்தின் பெயரில் இயங்கும் அறக்கட்டளைகள்.

அ) சிவத்தமிழ் செல்வி பிறந்தநாள் அறக்கொடை ஆண்டுதோறும் ஜனவரி 7ஆம் திகதி அறப்பணிகளுக்கு பயன்படுத்தப்படும்.

ஆ) கந்தபுராண அறக்கட்டளை

புராண பாரம்பரியத்தைப் பேணுவதற்கு லட்சம் ரூபா நிரந்தர வைப்பில் இட்டு அறக் கட்டளை உருவாக்கப்பட்டுள்ளது.

இ) பண்ணிசை அறக்கட்டளை

செல்வி சந்தணநங்கை கந்தப்பு விரிவுரையாளர் நிறைவு அறக்கட்டளை - பண்ணிசைத்துறைப் பாதுகாப்புக்குரியது.

ஈ) யாழ்பல்கலைக்கழகத்தில் - சைவசித்தாந்தத் துறைக்கான அறக்கட்டளை சித்தாந்த கல்வியை ஊக்குவித்தல்.

மேற்குறித்த தர்ம கைங்கரியம் பல நிறைவேற்றும் துர்க்கை அம்பாளின் வருடாந்த மகோற்சவம் கடந்த 16.08.2007 ஆரம்பமாகி சிறப்பாக நடைபெற்று, இன்று, அம்பாள் சித்திரத்தேர் ஏறி அடியார்களுக்கு அருள்பாலிக்க வரும் காட்சி அற்புதமானது. பல்லாயிரம் பக்தர்கள் தெல்லிமாநகரை நோக்கி தேடி வரும் நாள் இன்றைய பொன்னாள். நாளையதினம் துர்க்கா புஷ்கரணி தடாகத்தில் தீர்த்தத்திருவிழா நடைபெறும். அருளாலுக்குரிய தீர்த்தோற்சவத்திலும் அடியார்கள் ஆயிரமாயிரமாக கூடுவர். தெல்லி மாநகர் இந்திர விழாவாக எளிற்கோலம் கொள்ளும்.

இந்நாள்களில் இடரின்றி நாம் வாழ ஒன்று கூடிப் பிரார்த்திப்போம். உள்ளக் குமுறல்களை எடுத்துரைத்து தைரியத்து நாயகியிடம் அச்ச மற்ற அவலமற்ற ஆறுதல் அனைவர்க்கும் கிடைக்க மன்றாடுவோம்.

*நீதி நிலைத்திட நிம்மதி தந்திட*
*நித்திய நாயகி நிழல் தா*
*என வேண்டிப் போற்றுவோம்.*

**செஞ்சொற்செல்வர்.ஆறு.திருமுருகன்**



சரித்திரப் பிரசித்தி பெற்ற மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய தேர்த்திருவிழா இம்மாதம் 11ஆம் திகதி இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.
சுவாமி தேரேறுவதற்குப் பக்தர்கள் புடைசூழ எழுந்தருளி வருவதையும் தேரேறி வெளிவீதியுலா வருவதையும் படங்களில் காணலாம்.
இந்த ஆலய சர்வசித்து வருட கார்யோற்சவம் கடந்த மாதம் 19ஆம் திகதி ஆரம்பமாகி நடை பெற்றது.



## துர்க்கையம்பாள் தேர்த் திருவிழா

நலங் காண உலகமெல்லாம் நன்றாக நடக்க
கூட்டிலுயர் துர்க்காபுரி நாயகியாம் அம்மை
தலம் காண வந்துருவி மக்களையே நோக்கி
தற்போது எமை வாட்டும் பஞ்சம் பசி யகல
கலங்காதீர் என்பது போல் கைகாட்டி உயர்ந்த
கதி தருவாள் என்று நாம் கருதுவது விளக்கி
அலங்காரத் தேரேறி வீதிவரு கின்றாள்
அன்னவளின் பொன்னடியை அன்பாய்ப்
போற்றின் அருள்வாள்.

புலவர் வை.க.சிற்றம்பலம்


## நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

யாழ்ப்பாணம்,ஓக.26

நல்லூர் பெருந்திருவிழாவை முன்னிட்டு ஆலயச் சூழலில் நாவலர் மணிமண்டபத்தில் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்திவரும் ஆன்மீக நிகழ்வில் ஒன்பதாம் நாளான இன்று ஞாயிற்றுக்கிழமை 'நெஞ்சுக்கு நிம்மதி ஆண்டவன் சந்நிதி' என்னும் தலைப்பில் சைவப்புலவர் நா.நவராஜ் சொற்பொழிவாற்றுவார்.

நீர்வேலி ஸ்ரீ கணேசா அறநெறிப் பாடசாலை, நீர்வேலி ஸ்ரீ முருகன் அறநெறிப் பாடசாலை ஆகியவற்றின் மாணவர்களது கூட்டுப் பிரார்த்தனையும் இடம்பெறும். (203-79-111)

## பெருந்திருவிழா பக்திப்பாக்கள்



நல்ல மலரெடுத்து நல்லூரை நாடிப்போய்
நல்ல மனத்தோடு நாம் பணிந்தால் - நல்ல மயில்
ஏறிவந்து காட்சி கொடுப்பான் எழில்முருகன்
தேறிவிடும் சிந்தை தெளி.

- யோகர் சுவாமிகள்

### நல்லை நாதனே, சொல்லு பதிலை

*வெளி வந்து வீதி; உலா வந்து சென்றால்*
*வினையெல்லாம் தீருமோ சொல்?*
*அழிவு மிகப் பெருகி அனைவரும் மாண்டிடின்*
*அப்பணியும் உனதாகுமோ?*
*விழிமுட்டி நீர் ததும்ப விம்மியே அடியவர்*
*விளம்புதலும் கேட்கவிலையோ?*
*பழி வந்து சூழும் பார் விழி மைந்தனே*
*பாரா திருத்தல் முறையோ?*
*ஊழிக் கூத்தாடியே உலகினை அழித்திட*
*உமையவள் வகுத்த சதியோ?*
*நளினமாய் நல்லை வீதியில் வந்திடும்*
*நல்லை நாதனே! சொல்லு பதிலை!!*

-விகடகவி

### அருளாட்டும் சேவற்கொடி!


சகதி குருதிக் கொடி
சங்கமிக்க சொந்த மண்ணின்
உறவுக் கொடி அறுந்து
ஊருராய்ப் பறந்தோடும்
அகதிக் கொடி பறக்கும்
அவலங்கள் தணிந்து
அன்புக் கொடி பறக்க
அருளட்டும் சேவற் கொடி பறந்து!

*- நெடுந்தீவு லக்ஸ்மன்*

### நல்லதொரு தீர்வளிப்பாய்!!

மாலவன் மருகனே! முக்கண்ணன் நெற்றிக்கண்
பொறியினின்று உலகமது உய்யவே உதித்தவனே!
பாலகன் என உன்னைப் பரிகசித்த சூரன்தனை
வென்று அவனின் ஆணவத்தை அழித்த தீரா!
வேலெடுத்து வீரமுடன் சமர்செய்த வீரமைந்தா!
வானவரைச் சிறைமீட்டு வாழ்வழித்த சண்முகா!
ஞாலமதைக் காத்தருள்வாய்! நல்லையுறை திருக்குமரா!
நல்லதொரு தீர்வதனை நல்கிடுவாய் ஆறுமுகா!

*- நாயன்மார்கட்டு ப.மகேந்திரதாசன்*




யாழ்ப்பாணம்,ஓக.26

புங்குடுதீவு கதிர்காமம் ஆலயத் தேர்த்திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.

தீர்த்தத்திருவிழா நாளை திங்கட்கிழமை நடைபெறும்.

இந்த ஆலயப் பெருந்திருவிழா கடந்த 18ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. (203)

* * *

யாழ்ப்பாணம்,ஓக.26

அளவெட்டி நாகேஸ்வரம் நாகவரத நாராயணர் ஆலய பெருந் திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப 11.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறவுள்ளது.

அடுத்தமாதம் 4ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (203)

* * *

கோப்பாய் வடக்கு சக்கராழ்வார் ஆலய வருடாந்த பெருந்திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12 நாள்கள் நடைபெறும். எதிர்வரும் 4ஆம் திகதி செவ்வாய்க்கிழமை உறியடி உற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறும். திருவிழா காலங்களில் தினமும் அன்னதானம் நடைபெறும். (203-72)

* * *

ஊர்காவற்றுறை மெலிஞ்சிமுனை கிறிஸ்து அரசர் ஆலயத்தின் 50ஆவது ஆண்டு நிறைவுத் திருப்பலி இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு நடைபெறவுள்ளது. (203-51)

* * *

குருநகர் புனித் ஆரோக்கியநாதர் ஆலய திருவிழா திருப்பலி நாளை திங்கட்கிழமை காலை 7 மணிக்கு நடைபெறவுள்ளது. அன்று மாலை 3.30 மணிக்கு திருச்சொரூப பவனி திருச்செபமாலை வழிபாட்டுடன் ஆரம்பமாகி நடைபெறும். இவ்வாலயத் திருவிழா கடந்த 22ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. (203-51)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# 45ஆம் நாள் நினைவஞ்சலி



ஸ்ரீமான் மணியம்
கணபதிப்பிள்ளை

(அதிபர், யாழ்.தும்பளை
சிவப்பிரகாச மகாவித்தியாலயம்,
பொதுச்சபை உறுப்பினரும்,
து.நெ.அ.கோ.தர்மபரிபாலனசபை)

மலர்வு 27 - 08-1951
உதிர்வு 12-07-2007

கண்ணீரோடு கரைந்து மறைந்ததையா
அன்பான தொண்டனாய்
பாசமிகு பண்பாளனாய்
நீர் வாழ்ந்த வாழ்க்கையின் இனியசுவடுகள்
கனீவாகிப் போனமாயம் என்ன?

தும்பளை- நெல்லண்டை
அம்மன் கோயில் தர்மபரிபாலனசபை. (சி.53462)

# கதலி வாழைப்பழத்தின் விலை கிடு கிடு ஏற்றம்

குடாநாட்டில் கதலி வாழைப்பழத்தின் விலை என்றுமில்லாதவாறு நாளாந்தம் கிடு கிடுவென உயர்வடைந்து வருகிறது.

சந்தையில் ஒரு கிலோ 75 முதல் 80 ரூபா வரை கொள்வனவு செய்யப்படுகின்றது.

தனியார் கடைகளில் இடத்துக்கு இடம் வேறுபட்ட விலைகளில் கிலோ நூறு ரூபா வரை விற்பனையாகின்றது. சில நாள்களுக்கு முன்னர் கிலோ 50 ரூபா முதல் 60 ரூபா வரைக்கு கதலி வாழைப்பழம் விற்பனையாகியது.

இதேவேளை, இதரை, கப்பல் ரக வாழைப் பழங்களின் விலை குறைவாகவுள்ளன. கிலோ 45 ரூபா முதல் 65 ரூபாவரையிலேயே அந்த ரக வாழைப்பழங்கள் குடாநாட்டில் விற்பனையாகின்றன. ஆலய உற்சவ காலம் ஆரம்பித்துள்ளதாலேயே கதலி வாழைப்பழத்தின் விலை உயர்வடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.
(அ-1-86)


தமிழ்-சிவா
புவியியல்- S.R.சர்மா
அளவையியல்- P.கமல்
இந்து நாக.- T.ராஜன்
நா. அரங்கியல்-M.மயூரன்
பொருளியல்- V.V.K.கான்
கணக்கீடு - தவா
வணிகக்கல்வி - யசோ
பொனின்சுலா
அக்கடமி
புங்கன்குளம்.



## வேலை வாய்ப்பு

Sri Lanka Insurance

காப்புறுதியின் முன்னோடியும் யாழ்.மண்ணில் 45 வருடங்களாக இடைவிடாது நிலைத்து நின்று வரையறையற்ற ஆயுள், பொதுக் காப்பீட்டினை இன்றும் வழங்கி வருவதுமான இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் தனது சேவையை கிராம ரீதியாகவும் விஸ்தரிக்கும் நோக்குடன் காப்புறுதி ஆலோசகர்களை நியமிக்கவுள்ளது.

அடிப்படைத் தகைமை: G.C.E .O/L பரீட்சையில் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி.

தகைமையும் ஆர்வமும் உள்ளவர்கள் உரிய கிளையில் உரிய திகதியில் நேர்முகத் தேர்விற்கு சமுகந்தரவும்.

27.08.2007 அல்லது 03.09.2007
முற்பகல் 9 - 11
வீரசிங்கம் மண்டபம்,
யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 2023
Mobile: 0777563781

31.08.2007 அல்லது 05.09.2007
முற்பகல் 9 - 11
பிரதான வீதி, மக்கள் வங்கி
முன்பாக, நெல்லியடி.
T.P.: 021 222 4686
Mobile: 0777297547

★ பகுதி நேரமாக வேலை செய்ய விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம்.
(64148)



## கடை வாடகைக்கு

காங்கேசன்துறை வீதியில் மேல்வீடும் கீழ்வீடும் அடங்கிய கடை வாடகைக்கு உண்டு.
தொடர்பு:- 222 5253 (64158)

## விற்பனைக்கு

கலப்பின கோழிக்குஞ்சுகள் ஒரு நாள், 15 நாள், 1 1/2 மாதம் நிரம்பியது. நல்லின அடை முட்டை, விறாத்துச் சேவல் விற்பனைக்குண்டு.
ச.ஜெகன், நேசவாளர் ஒழுங்கை, இருபாலை வீதி, கோண்டாவில்.


## தவறிவிட்டது

சிவசாமிஐயர் மங்களேஸ்வரசர்மா என்பவருடைய தேசிய அடையாள அட்டை (730773080V) மோட்டார் சைக்கிள் காப்புறுதிப்பத்திரம், வரிப்பத்திரம், இராணுவ அனுமதி அட்டை வங்கி வைப்புப் புத்தகம் என்பன அடங்கிய கறுப்பு நிற கைப்பேர்ஸுடன் இராஜ வீதிக்கும் நவக்கிரி வீதிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் சந்திர ஞான வைரவர் தேவஸ்தானம், யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (64167)


## CHEMISTRY PERSONAL CLASS

(2008/2009)Batch Physical chemistry Theory and pass paper செய்து விடப்படும்.
தொடர்பு:-பராபரன் B.Sc, M.Sc(chemistry)
T.P 0776006579 (64153)

## உடன் விற்பனைக்கு

புதிய தகர shed (25'x 15', 15'x8 1/2'), Aluminium - zinc (corrugated rooting) Gavge - 28, 1'' Pakistan pipes, Gates & பீலியுடன் விற்பனைக்குண்டு
T.P 0212227086, 0776528643 (64144)


## தவறிவிட்டது

கந்தரோடை, உடுவில் வீதியினூடான பயணத்தின்போது கைச்சங்கிலி ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கன்னாதிட்டி மக்கள் வங்கிக்கு முன்னால் அமைந்துள்ள பழக்கடையில் ஒப்படைக்கவும். அல்லது தொலைபேசி மூலம் 0776686903 தொடர்புகொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (64155)


## இறைச்சிக் கோழிக்குஞ்சுகள் விநியோகம்

நாளை (27.08.2007) திங்கட்கிழமை பெற்றுக் கொள்ளலாம்.
தொடர்பு:-
1.சிறி விநாயகர் ஸ்ரோர்ஸ், ஆனைக்கோட்டை சந்தி.
2.சிற்றி பாம் றேடர்ஸ், கல்வியங்காடு.
3.வீனஸ் பாம், திருநெல்வேலி.
4.கோல்டன் பாம், கோயில் வீதி, கச்சேரியடி.
5.வீனஸ் விற்பனை நிலையம், அரசடிவீதி, தட்டாதெரு சந்தி.
6.அராலி கோழிப்பண்ணை, அராலிமத்தி, அராலி.
(64160)


## புலோலி தென்மேற்கு

கந்தமுருகேசனார் சனசமூக நிலையத்தினரால் 19.08.2007இல் நடத்தப்பட்ட அதிர்ஷ்ட லாப சீட்டிழுப்பு முடிவுகள்

| | |
|---|---|
| முதலாம் பரிசு இலக்கம் | - 3998 |
| இரண்டாம் பரிசு இலக்கம் | - 3277 |
| மூன்றாம் பரிசு இலக்கம் | - 1355 |

ஆறுதல் பரிசுகள்

| | |
|---|---|
| முதலாவது இலக்கம் | - 2727 |
| இரண்டாவது இலக்கம் | - 3225 |
| மூன்றாவது இலக்கம் | - 3243 |
| நான்காவது இலக்கம் | - 4152 |
| ஐந்தாவது இலக்கம் | - 1495 |

(64143) நிர்வாகம்.

## தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்கா தேவி அன்னை




தேரேறி வீதி உலாவரும்
இன்றைய நன்நாளில்
விழா சிறப்புற வாழ்த்துவோர்:
"வெஸ்ரா இன்டஸ்ரீஸ்"
ஆனைக்கோட்டை.
T.P.: 021 4591372.

★ திருமண விழாக்கள் மற்றும் விசேட வைபவங்களில் இலகுவாகவும் நிறைவாகவும் அருந்திட
வெஸ்ரா நெல்லிக்கிரஷ். (64142)

# மரண அறிவித்தல்கள்

## தம்பு தர்மலிங்கம் (ஆச்சாரி)



காளிகோயிலடி, வட்டு.தெற்கு, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு தர்மலிங்கம் 24.08.2007 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பு- சிவக்கொழுந்து தம்பதியரின் புதல்வரும் நல்லம்மாவின் அன்புக் கணவரும் ஸ்ரீகோகிலாம்பிகை (ஆசிரியை, நவாலி மகாவித்தியாலயம்) அவர்களின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.08.2007) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காளிகோயிலடி,
வட்டு.தெற்கு,
வட்டுக்கோட்டை. (சி/53465)

தகவல்:
த.ஸ்ரீகோகிலாம்பிகை
(மகள்).

## திருமதி சின்னம்மா மயில்வாகனம் (நாகம்மா ரீச்சர்)

(ஓய்வுபெற்ற ஆசிரியை, யா/ விக்கினேஸ்வராக் கல்லூரி, கரவெட்டி)

துரையன்தோட்டம், நெல்லியடியைப் பிறப்பிடமாகவும் முருக்கந் தோட்டத்தை வசிப்பிடமாகவும் கொழும்பு, வெள்ளவத்தையைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னம்மா மயில்வாகனம் 24.08.2007 வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மயில்வாகனத்தின் மனைவியும் பாலசுப்பிரமணியம் (கரவெட்டி), இராஜேஸ்வரி (கொழும்பு), லோகேஸ்வரி (கனடா), இரவீந்திரன் (கொழும்பு), சற்குணம் (கனடா), புவனேந்திரன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தாயும் மனோரஞ்சிதம், சிவசுப்பிரமணியம், அன்பழகன், ஆதித்தை, சிவசாந்தினி, கிருஷ்ணவேணி ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்ற பாறுபதியின் அன்புச் சகோதரியும் பபீதா, உமாபதி, அஜிதா, துவாசினி, ஆர்த்தீபன், உமாநிதி, சைலாசினி, கபில்ராஜ், மிலோஜா, கிரிஜா, அபிராமி, விசானி, சஜீத் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (27.08.2007) திங்கட்கிழமை கொழும்பில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொழும்பு கனத்தை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'பபி அகம்',
சாமியன் அரசடி,
கரவெட்டி. (64654)

தகவல்:
ம.பாலசுப்பிரமணியம்
(மகன்).

# கண்ணீர் அஞ்சலி

சாவகச்சேரி பிரதேசசபை
ஊழியர்
ப.தங்கவடிவேல்
அவர்களின் அன்பு மனைவி
ஸ்ரீகௌசலாதேவி
அவர்களின் மறைவால்
துயருற்றிருக்கும்
அன்னாரின்
குடும்பத்தவர்களின் துயரில்
நாமும் பங்கு கொள்வதோடு
அன்னாரின் ஆத்மா
சாந்திக்காக இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச் சங்கம்,
சாவகச்சேரி பிரதேசசபை,
கொடிகாமம். (சி- 53455)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வன்
யோகராசா கஜன்
(கரப்பந்தாட்ட வாலிப கழக உறுப்பினர், தோப்பு)

பிறப்பு 11 - 07 - 1983
இறப்பு 05 - 09 - 2006

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
சந்நிதி முருகனை இறைஞ்சுகின்றோம்.

இராச வீதி, தோப்பு,
அச்சுவேலி. (64125)

என்றும் உன் நினைவுகளில்:
குடும்பத்தினர்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 25 . 10 . 1935



மறைவு 26 . 08 . 2006

அமரர் ஆசிர்வாதம் ஸ்ரீபன்
(ஓய்வு பெற்ற தபால் திணைக்கள ஊழியர்)

எங்கள் வீட்டு ஒளி விளக்கே!
எங்களை வாழவைத்த தெய்வமே!
ஆண்டு ஒன்றானாலும் ஆறவில்லை எம்துயர்!
உங்கள் ஆன்மா இளைப்பாற்றியடைய
எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

வளன்புரம்,
கொழும்புத்துறை (64102)
குடும்பத்தினர்.

# மூன்றாம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
விஜயநாதன் விக்னேஸ்வரராஜா
(அத்தான்)
திதி:- ஆவணி பூர்வபக்க திரயோதசி

தோற்றம் 25 - 10-1960
மறைவு 28- 08-2004

அன்பாக அரவணைத்து அறிவெனும் உணவளித்து வளர்த்தவரே!
அன்பையும் பண்பையும் இறைபக்தியையும்
இலட்சியமாகக் கொண்டவரே!
இப்போது படமாக தொங்குகிறீர்களே அப்பா!
எம்மை விட்டுப்பிரிந்து மூன்றாண்டு சென்றாலும்
நீங்காது உங்கள் நினைவு

வீமன்காமம்,
தெல்லிப்பழை. (64027)
மனைவி, பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# உலக அரங்கில் 'புகழ்' பதிக்கும் இலங்கை அரசின் நல்லாட்சி

தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில்தான் தென்னிலங்கை அரசு மிக மோசமாக நடந்து வருகிறது என்றால், ஏனைய விவகாரங்களிலும் அதன் ஆட்சி முறை அப்படித்தான் இருக்கின்றது என்பதைப் புள்ளி விவரங்கள் நிரூபிக்கின்றன.

1996 முதல் 2006 வரையான பத்தாண்டு காலத்தில் உலக நாடுகளில் நல்லாட்சி தொடர்பாக உலக வங்கி நடத்திய விரிவான ஆய்வு, இலங்கை அரசின் 'வெட்டுக் கேட்டை' அப்படியே அம்பலப்படுத்தியிருக்கின்றது.

இலங்கையை விட பின்தங்கிய - வறிய - ஆபிரிக்க நாடுகள் சில கூட 'நல்லாட்சி' விடயத்தில் ஆக்கபூர்வமான முன்னேற்றத்தைக் காட்ட, இலங்கை மட்டும் எதிர்மறை வினையைக் காட்டி நிற்கின்றது

உலகில் மொத்தம் 212 நாடுகள் மற்றும் பிரதேசங்களில் இந்த ஆய்வு நடத்தப்பட்டது. நல்லாட்சியைக் கணிப்பிடுவதற்கான ஆறு அடிப்படை அம்சங்களை வகுத்து அவற்றின் போக்குக் குறித்து உலக வங்கி மதிப்பீடு செய்திருக்கின்றது.

அரசியல் ஸ்திரம், கருத்து வெளிப்பாடும் பொறுப்புக் கூறலும், அரசின் செயற்றிறன், ஒழுங்குமுறைத் தரம், சட்டத்தின் ஆட்சி, ஊழல் - மோசடியைக் கட்டுப்படுத்தல் ஆகிய ஆறு தலைப்புகளிலேயே உலக நாடுகளின் பல்வேறு அரசுகள் மேற்கொள்ளும் நல்லாட்சி மதிப்பீடு செய்யப்பட்டிருக்கின்றன.

ஒட்டுமொத்தத்தில் இந்த தசாப்த காலத்தில் இலங்கை இந்த ஆறு பிரிவுகளிலுமே கீழ் நோக்கிய வீழ்ச்சியையை காட்டியிருக்கின்றது.

'சட்டத்தின் ஆட்சி' என்ற விவகாரத்தில் முன்னேற்றம் இல்லாவிட்டாலும் பெரிய வீழ்ச்சி இல்லை என்கிறது உலக வங்கியின் ஆய்வு.

அதுமட்டுமல்லாமல் 2002-2004 ஆம் ஆண்டுப் பகுதியில் இந்த ஆறு பிரிவுகளிலுமே ஆட்சி முறையில் சிறிது முன்னேற்றம் - சாதகமான தன்மை - வெளிப்படுத்தப்பட்டிருப்பதையும் அந்த ஆய்வு காட்டுகிறது. இலங்கை இனப்பிரச்சினைக்கு அமைதி வழியில் தீர்வுகாண்பதற்கான சமாதான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட கால கட்டமே அது என்பதும் கவனிக்கத்தக்கது.

மிகுந்த அரசியல் நெருக்கடிகளில் இருந்து மீண்டிருக்கும் இந்தோனேஷியா, தஜிகிஸ்தான், சேர்பியா, ஸ்லோவாக்கியா, ஆபிரிக்க நாடுகளான நைகர், சிரியா லியோன், அங்கேலா, கொங்கோ குடியரசு, லைபீரியா, தன்ஸானியா, ருவாண்டா ஆகியவை கூட - இந்த ஆய்வின்படி நல்லாட்சி விவகாரத்தில் கணிசமான முன்னேற்றத்தை வெளிப்படுத்தியிருக்கின்றன.

குறிப்பாக லைபீரியா, அங்கோலா, ஆர்ஜென்ரீனா, ஜோர்ஜியா போன்ற நாடுகள் கடந்த நான்கு ஆண்டு காலத்துக்குள் குறிப்பிடத்தக்க - ஆச்சரியப்படத்தக்க மேம்பாட்டை ஆட்சி முறை விடயத்தில் வெளிப்படுத்தியிருக்கின்றன.

ஆனால் இலங்கை நிலையோ தலைகீழாக இருக்கின்றது. அதுவும் தற்போதைய மஹிந்தரின் அரசின் ஆட்சி முழுமையாக மதிப்பீட்டுக்கு உள்ளாகும்போது அதன் பெறுபேறு எல்லோரையும் வியக்க வைக்கும் விதத்தில் மோசமானதாக இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

ஒருபுறம் ஊழல், மோசடிகள் தொடர்பாக தினசரி வெளிப்படும் செய்திகள். மறுபுறம் அரசியல் பழிவாங்கல்கள், தவறுகளுக்குப் பொறுப்புக் கூறாமை, குற்றமிழைத்தவர்களுக்கு சட்ட விலக்களிக்கும் விசேட ஏற்பாடுகள் என்று நல்லாட்சிக்கு சாவுமணி அடிக்கும் கேடுகள். அத்தோடு அதிகாரத் துஷ்பிரயோகம், இன ஒடுக்கல், மிக மோசமாக அதிகரித்துவரும் மனித உரிமை மீறல்கள், அவற்றுக்குப் பாதுகாப்பு அளித்து ஊக்குவிக்கும் அவசரகாலச் சட்டவிதிகள், அரச பயங்கரவாதம் என்று கொடூர அம்சங்கள். இவை எல்லாம் சேர்ந்து உலக அரங்கில் நல்லாட்சிப் பட்டியலில் கடைசி இடத்தை இலங்கைக்கு வாங்கித் தந்துவிடும் என்பதை நம்பிக்கையுடன் எதிர்பார்க்கலாம்.

ஏற்கனவே மனித நேயத் தொண்டுப் பணியாளர்கள் தமது கடமையை ஆற்றுவதற்கு மிக ஆபத்தான இடம் இலங்கை என்ற கீர்த்தியை ஐ.நா.தரப்பிடம் இருந்தே நற்சான்றிதழாகப் பெற்றுக்கொண்டுள்ளது இந்த ஆட்சி.

அதேபோன்று உலகில் ஊடகவியலாளர்கள் பணியாற்றுவதற்கு மிக மோசமான - ஆபத்தான - இடம் இலங்கை என்ற நற்பெயரையும் சர்வதேச ஊடக அமைப்புகளிடம் இருந்து இலங்கை சுவீகரிப்பதற்கு இந்த ஆட்சி வழிசெய்திருக்கின்றது.

இந்த நிலையை இன்னும் ஏனைய துறைகளுக்கும் விஸ்தரித்து உலகில் மோசமான ஆட்சி நிலவும் நாடுகளில் முதனிலை என்ற கிரீடத்தை இலங்கைக்கு இந்த அரசு நிச்சயம் வாங்கித்தரும் என எதிர்பார்க்கலாம்.

நியாயமான உரிமைகளைக் கோரும் தமிழ்த் தேசியத்தின் எழுச்சியை அடக்கி, ஒடுக்கி, அமுக்கும் பேரினவாத மேலாதிக்கத்தைச் செயற்படுத்தும் புறநோக்கில் இந்த அவலங்கள் - அபத்தங்கள் - எல்லாம் இந்த ஆட்சித் தலைமையால் அரங்கேற்றப்படுகின்றன. இலங்கை மக்கள் என்ன செய்வார்கள்? பாவம் அவர்களின் தலையெழுத்து இது!

பௌத்த - சிங்களப் பேரினவாத மேலாண்மையின் பிரசாரத்துக்கு எடுபட்டு, இந்த ஆட்சியைத் தேர்ந்தெடுத்த அவர்களின் மோசமான தவறு காரணமாக இதை எல்லாம் அவர்கள் அனுபவித்துத்தானாக வேண்டும்.

## பாதுகாப்பு அனுமதியை நேரகாலத்துடன் பெற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,ஓக.26

யாழ். மாவட்டத்திலிருந்து வெளி மாவட்டங்களுக்கு கப்பல் மூலமோ அல்லது விமானம் மூலமோ பயணம் செய்யவுள்ளோர் இயன்றவரை நேரகாலத்துடன் தமக்கான பாதுகாப்பு அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

- இவ்வாறு யாழ். அரச அதிபர் கே. கணேஷ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

வெளி மாவட்டங்களுக்குச் செல்ல இருக்கும் அரச உத்தியோகத்தர்கள், மாணவர்கள் மற்றும் ஏனைய தேவைகளுக்காகச் செல்லவுள்ளோர் அனைவரும் தங்களுக்கான பாதுகாப்பு அனுமதியினை உரிய பிரதேச செயலர் ஊடாக தங்கள் பிரதேச செயலகங்களுக்குப் பொருத்தமான சிவில் அலுவலகம் ஊடாக பெற்றுக்கொள்ளவேண்டும்.

பிரயாணம் செய்ய உத்தேசித்துள்ளவர்கள் நேரகாலத்துடன் விண்ணப்பங்களை மேற்கொள்ள வேண்டும்.

மிகவும் அவசரமான, அத்தியாவசிய தேவைகளுக்கு மட்டுமே மாவட்டச் செயலகம் ஊடாக விண்ணப்பங்கள் சிபார்சு செய்யப்படும்.

எனவே, பிரயாணிகள் மாவட்ட செயலகத்திற்கு வருவதைத் தவிர்த்துக் கொள்ளுதல் வேண்டும் - என்று தெரிவித்துள்ளார்.

இதேவேளை-

பலாலி பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகமும் இவ்விடயம் தொடர்பாக விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

யாழ்.மாவட்டத்தில் இருந்து வெளியே செல்வோர் இறுதி நேரத்தில் பாதுகாப்பு அனுமதியைப் பெற முயற்சிப்பதால் பெரும் நெருக்கடியான நிலை ஏற்படுகிறது.

எனவே, எதிர்வரும் காலங்களில் பயணங்களை மேற்கொள்ள இருப்போர், தாமதிக்காது அருகில் உள்ள இராணுவ முகாமிற்கு நேரகாலத்துடன் விண்ணப்பித்து பாதுகாப்பு அனுமதியை முன்னதாகவே பெற்று தயாராக இருத்தல் வேண்டும் - என்றுள்ளது. (அ-203)

## வரணியில் நேற்று ஒருவர் சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம்,ஓக.26

வரணி, இயற்றாலைப் பகுதியில் நேற்று முற்பகல் 11 மணியளவில் ஒருவர் இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

மீசாலை தெற்கு மீசாலையைச் சேர்ந்த சண்முகநாதன் சசிகரன்(வயது 30) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

வீட்டில் இருந்த அவரை வெளியே அழைத்த ஆயுததாரிகள் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றனர்.

பிரேத பரிசோதனைக்காக சடலம் யாழ். ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளது. (1-5-207)

## துர்க்கையம்மன் ஆலய தேர்த்திருவிழா இன்று

யாழ்ப்பாணம்,ஓக.26

பிரசித்திபெற்ற தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய தேர்த்திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

இன்று காலை 9 மணிக்கு வசந்த மண்டபப் பூசை இடம்பெற்று துர்க்காதேவி தேரில் எழுந்தருளுவார்.

தேர்த்திருவிழாவை பக்திபூர்வமாகவும் மிக அடக்கமாகவும் நடத்துவதற்கு ஆலய நிர்வாகம் ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

நாளை காலை 8.30 மணிக்கு தீர்த்தத் திருவிழா இடம்பெறும்.

இத்திருவிழாக்களில் பங்கு கொள்ளும் பக்தர்களின் நலன்கருதி குடாநாட்டின் சகல பகுதிகளில் இருந்தும் விசேட போக்குவரத்து வசதிகள் செய்யப்பட்டுள்ளன. (அ-1-68-202)

## இன்றைய நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஓக.26

வடமராட்சி, அல்வாய் வடக்கு டாக்டர் பொன் மகாலிங்கம் ஞாபகார்த்த இளங்கோ மழலைகள் கல்விப் பூங்காவின் விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பூங்காவின் மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

கழகத்தின் பெற்றோர் - ஆசிரியர் சங்கத் தலைவர் சி.உதயகுமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக முறைசாராக் கல்விப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் மு. இராசநாயகம் கலந்துகொள்வார். (203)

* * *

செயற்திறன் அரங்க இயக்கத்தின் ஏற்பாட்டில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இணுவில் கந்தசுவாமி கோயில் இளந்தொண்டர் சபை மண்டபத்தில் 'ஏகம் அனேகம்' என்னும் பொருளில் தெரிவுசெய்யப்பட்ட நாடகங்கள் அரங்கேற்றப்படவுள்ளன.(203)

* * *

'சொண்ட்' நிறுவனத்தால் வறிய குடும்பங்களைச் சேர்ந்த 40 பயனாளிகளுக்கு இன்று காலை 9.30 மணிக்கு நிறுவனத்தின் யாழ். அலுவலகத்தில் வைத்து சுயதொழில் உதவித் திட்டக் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

இந்நிகழ்வில் யாழ்.பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.பாலசுப்பிரமணியம் மக்களுக்கான உதவித் திட்டங்களை வழங்குவார்.

அதன் பின்னர் வட்டுக்கோட்டை விவசாயப் பண்ணை முகாமையாளர் எஸ். குகனேசன் விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை நடத்துவார். (203)

* * *

பருத்தித்துறை ஆத்தியடி சன சமூக நிலையத்தின் ஆதரவுடன் சைவ மன்ற முன்பள்ளியின் விளையாட்டு விழா இன்று பிற்பகல் 1.30 மணிக்கு ஆத்தியடி பிள்ளையார் கோயில் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

நிலையத்தின் உப தலைவரும் பாடசாலை பெற்றோர் சங்கத் தலைவருமான க.சிறீதரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை நகராட்சி மன்றச் செயலாளர் அ.அ.நடராசா கலந்துகொள்வார்.(115)

# ஊடகவியலாளர் பணிபுரிய உலகிலேயே மிகவும் ஆபத்தான இடம் யாழ். குடாநாடு!

## இரு சர்வதேச அமைப்புகளின் கூட்டறிக்கையில் தெரிவிப்பு

கொழும்பு,ஓக.26

யாழ்ப்பாணக் குடாநாடுதான் உலகிலேயே ஊடகவியலாளர்கள் பணிபுரிய மிகவும் ஆபத்தான இடம் என்று அனைத்துலக ஊடக அமைப்பான எல்லைகளற்ற ஊடகவியலாளர்கள் அமைப்பும், அனைத்துலக ஊடக ஆதரவு அமைப்பும் தெரிவித்துள்ளன.

இந்த இரண்டு அனைத்துலக ஊடக அமைப்புகளும் இலங்கை நிலைமைகள் தொடர்பாக நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கூட்டறிக்கை ஒன்றை வெளியிட்டன.

இந்த அறிக்கையை இலங்கை சுயாதீன ஊடக அமைப்பு சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு அனுப்பி வைத்துள்ளது.

பிரஸ்தாப அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள முக்கிய அம்சங்கள் வருமாறு:-

ஊடகவியலாளர்கள் பணிபுரிவதற்கு உலகிலேயே மிகவும் ஆபத்தான இடங்களில் ஒன்றாக யாழ்ப்பாணம் உள்ளது. ஊடகவியலாளர்கள் படுகொலைகள், கடத்தல்கள், அச்சுறுத்தல்கள் மற்றும் தணிக்கைகள் நிகழ்த்தப்பட்டு வருகின்றன.

2006ஆம் ஆண்டு மே மாதம் தொடக்கம் இரண்டு ஊடகவியலாளர்கள் உட்பட ஆகக்குறைந்தது 7 ஊடகப் பணியாளர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். ஒரு ஊடகவியலாளர் காணாமல் போயுள்ளார். 3 ஊடக நிறுவனங்கள் மீது தாக்குதல்கள் நிகழ்த்தப்பட்டுள்ளன. ஊடகப் பணியைக் கைவிட்டுப் பல ஊடகவியலாளர்கள் அங்கிருந்து வெளியேறிவிட்டனர்.

மிகவும் இராணுவ மயமாக்கப்பட்டுள்ள யாழ்ப்பாணம் 90 வீத ஊடகப் பணியாளர்களை ஓராண்டில் இழந்திருக்கின்றது.

'உதயன்' தமிழ் நாளிதழின் ஓர் ஊடகவியலாளர் உயிராபத்துக் காரணமாக 13 மாதகாலமாக அலுவலகத்தை விட்டு வெளியே வராமலேயே பணிபுரிந்து வருகிறார். ஸ்ரீலங்கா இராணுவத்தினர் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகள், துணை இராணுவக் குழுவினரிடையேயான மோதலில் ஊடகவியலாளர்கள் சிக்கிக்கொள்கின்றனர். ஊடகங்களில் கருத்துகளோ, கட்டுரைகளோ, கேலிச்சித்திரங்களோ, புகைப்படங்களோ வெளியிட்டால் ஆபத்தை எதிர்கொள்ளும் நிலையிலேயே ஊடகவியலாளர்கள் உள்ளனர் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய ஊடகவியலாளர்களுக்கு எதிரான வன்முறைகள் நிகழ்த் தப்படுவதால் அங்கு என்ன நடக்கிறது என்பது தொடர்பான சுயாதீன செய்திகள் வெளிவருவதில் சிக்கல்கள் உள்ளன'' என்று எல்லைகளற்ற ஊடகவியலாளர்கள் அமைப்பின் தலைவர் வின்செண்ட் ப்ரொசெல் குறிப்பிட்டுள்ளார்.

''ஊடகவியலாளர் பணிபுரிய ஈராக் மிகவும் மோசமான இடமாக உள்ளது. உள்நாட்டுப் போர் அல்லது இனப்பிரச்சினை நடைபெறும் இடங்கள் எனில் காசாவிலும் செச்சேன்யாவிலும் இத்தகைய நிலைமை உள்ளது'' என்றும் அவர் கூறினார்.

மனிதாபிமானப் பணியாளர்கள் பணியாற்ற உலகிலேயே மிகவும் ஆபத்தான இடமாக ஸ்ரீலங்கா உள்ளது என்று அண்மையில் ஐக்கிய நாடுகள் சபையின் உயர் அதிகாரி ஜோன் ஹோம்ஸ் குற்றம் சாட்டியிருந்தார்.

தற்போது ஊடகவியலாளர்கள் பணியாற்ற உலகிலேயே மிகவும் ஆபத்தான இடமாக ஸ்ரீலங்கா இராணுவத்தின் ஆக்கிரமிப்பில் உள்ள யாழ்ப்பாணக் குடாநாடு உள்ளதாக அனைத்துலக ஊடக அமைப்புகளும் குற்றம்சாட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சி)

### நாளை

| | |
|---|---|
| ஆவணி - 10 | திங்கட்கிழமை 27.08.2007 |
| திதி : சதுர்த்தசி | காலை 06.26 |
| நட்சத்திரம் | திருவோணம் முற்பகல் 10.51 |
| சுபநேரம் | : 12.05 - 01.35 |
| ராகுகாலம் | : 07.35 - 09.05 |

## இந்திய அரசை...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

யும் கதிரியக்கத்தையும் ஏற்படுத்தியது. இந்தக் கொடிய விபத்தில் பலர் உயிரிழக்க நேரிட்டது. 3 லட்சத்துக்கும் மேற்பட்டோர் பாதுகாப்புக்காக வேறு இடங்களுக்கு அப்புறப் படுத்தப்பட்டனர். ஒரு இலட்சம் பேர் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டனர். சொர்னோ பிலைச் சுற்றி 50 மைல் வட்டத்திற்கு மண் பயனற்றதாகிவிட்டது.

அமெரிக்காவின் மூன்று மைல் தீவில் நிகழ்ந்த அணுஉலை விபத்தில் கதிரியக்கத் தைத் தடுக்க இரண்டு ஆண்டுகளும், 2 கோடி டொலர்களும் செலவானது. ஏழு ஆண்டுகளுக் குப் பின் 100 கோடி டொலர் செலவழிக்கப் பட்டது. கொட்டப்பட்ட கொன்கிரீட் கல வையை மீறிக் கதிரியக்கம் தலை காட்டுகிறது என்பது மற்றொரு தகவல். அணுமின் தயாரிப்பின் பிறகு உருவாக்கக்கூடிய புளு டோனியம், பல்லாயிரக் கணக்கான ஆண்டு களுக்கு கதிரியக்கத்துடன் இருக்கும் தன்மை கொண்டது.

### மின்சாரத்தேவையும் அணுமின் நிலையங்களும்

உலகளாவிய மின்தேவை அடுத்த 25 ஆண்டுகளில் 50 சதவீதம் அதிகரிக்கும் என்ற நிலையில் 25 அணுமின் உலைகள் மட்டுமே தற்போது கட்டப்பட்டு வருகின்றன. மேலும் 76 அணுமின் உலைகள் அமைப்பதற்கான திட்டங்களும் உள்ளன. தற்போது செயற்பட்டுக்கொண்டிருக்கும் சுமார் 430 அணு மின் உலைகளிலும் பெரும்பாலானவை தங்களது ஆயுளின் விளிம்பில் நின்று கொண்டிருக் கின்றன.

அடுத்த 60 ஆண்டுகளுக்குள் சுமார் 3000 அணுமின் உலைகளை நிறுவி மின் உற்பத்தி செய்தால் மட்டுமே உலக கார்பன் வெளியீட்டு அளவைக் குறிப்பிட்ட அளவில் குறைக்க முடியும் என்றும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இது சாத்தியமாகுமா என்ற கேள்வி பெரிதாக எழுந்து நிற்கிறது.

- அச்சுதன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு - கிழக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்திரன் உதயனுக்குத் தெரிவித்தார்.

கிழக்கில் இடம்பெறும் இனச்சுத்திகரிப்பு, உயர்பாதுகாப்பு வலயப் பிரகடனம், மீளக்குடியமர்ந்த மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் அங்கு தேர்தல் நடத்தும் முயற்சி ஆகியன தொடர்பாகவும் இந்த விவாதத்தில் எடுத்துக்கூறப்படும் என்றும் அவர் சொன்னார்.

அனைத்துக்கட்சித் தெரிவுக்குழுவின் செயற்பாடுகளில் இருந்து வரும் தாமதங்கள், முரண்பாடுகள் குறித்தும் பிரஸ்தாபிக்கப்படும் என்றும் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார். (அ-1)

## அனைத்துக் கட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாளை நடைபெறவிருந்த அனைத்துக்கட்சித் தெரிவுக்குழுவின் கூட்டமும் உத் தேசிக்கப்பட்டிருந்த ஏனைய கூட்டங்களும் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

கட்சித் தலைவர்களுக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் இணக்கம் ஏற்படும் பட்சத்திலேயே மீண்டும் தெரிவுக் குழுவைக் கூட்ட முடியும் என்று திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார். (அ-1)

## இலங்கையின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐ.நா. குறித்து கருத்து வெளியிட்டார்.

ஹோம்ஸை பயங்கரவாதி என்றும் விடுதலைப் புலிகளிடம் லஞ்சம் பெறுபவர் என்றும் இலங்கை அரசு விமர்சனம் செய்தது. எனினும் அதையிட்டு ஐ.நா பொங்கி எழவில்லை. பூனைபோல் இருந்தது ஏன் என்று அவர் கேள்வி எழுப்பினார்.

பன்னாட்டுச் சமூகத்தின் போக்கு தமிழ் மக்களை ஐயப்பட வைத்துள்ளது. இலங்கைக்கு உதவிகளை நிறுத்துவதாக சர்வதேசு சமூகம் பகிரங்கமாகக் கூறினாலும் உதவிகள் வந்துகொண்டுதான் இருக்கின்றன.

சர்வசேத்தின் நிலைப்பாடு குறித்து தமிழ் மக்கள் சந்தேகம் கொள்கின்றனர். - இப்படி அவர் தெரிவித்தார்.

கிழக்குக்கும், குடாநாட்டுக்கும் சென்று ஒன்றிரண்டு பேரைச் சந்தித்தாக ஹோம்ஸ் கூறுகின்றார். அப்படியிருந்தால் கிழக்கில் அபிவிருத்திக்கு ஐ.நா. ஒத்துழைப்புக் கிடைக்கும் என்று அவர் என்ன அடிப்படையில் கூறினார்.

மனிதாபிமான நடவடிக்கை செய்வதற்கு ஏதுநிலை இலங்கையில் இல்லை என்று கூறியிருக்கின்றார். பின்பு எந்த அடிப்படையில் நிதியை வழங்க ஒப்புக்கெண்டார் - இப்படி இளந்திரையன் தமது உரையாடலில் கூறினார். (1)

## படுகொலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதே வேளை-

நாடளாவிய ரீதியில் காணாமற்போனோர் பட்டியலில் தமிழர்களே முன்னிலை வகிக்கின்றனர். கடந்த ஆறுமாத காலப்பகுதியில் நாடளாவிய ரீதியில் 64.6 சதவீத மான தமிழர்களும், 3 சதவீத சிங்களவர் களும், 3 சதவீத முஸ்லிம்களும் கடத்தப்பட் டுள்ளனர்.

இவற்றில் 98 சதவீத கடத்தல் சம்பவங்கள் ஆண்களை மையமாக வைத்தே மேற்கொள்ளப்பட்டன. கடத்தல் சம்ப வங்களில் யாழ்ப்பாண பிரதேசமே கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. கடத்தப்பட்டோர் சம்பவங்களில் 49.5 சதவீதமானவை யாழ்ப்பாணத்திலேயே இடம்பெற்றுள்ளன.

கொழும்பில் 17.7 சதவீதமானோர் கடத்தப்பட்டுள்ளனர். இதில் 19 சதவீதமானோர் தமது வீடுகளில் வைத்தே கடத்திச் செல்லப்பட்டனர். யாழ்ப்பாண பிரதேசத்தில் ஊரடங்கு வேளையிலேயே அதிகமானோர் கடத்தப்பட்டனர். (அ-5)

## அரிசி, பருப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களே உணவைத் தயாரித்து பசி போக்கும் பொருட்டு விறகு, மரக்கறி, மீன் மற்றும் உப உணவுப் பொருள்களை அரச சார்பற்ற நிறுவனங்கள் வழங்கி வந்தன. அந்த உதவிகள் நிறுத்தப்பட்டதால் மக்கள் அவலநிலைக்குத் தள்ளப்பட்டனர். (அ-1)

**NEW SCIENCE CENTER**
யாழ். நகர்
A/L DAY CLASS
ஆரம்பம் 28.08.2007 Tue. 9.00
CHE. - முன்னணி ஆசிரியர்
PHY. - செல்வன்
BIO. - அல்போன்ஸ்
MATHS - சிவகரன்
ஆரம்பமாகிவிட்ட புதிய பிரிவுகள்
ORGANIC
Sat., Sun., 12.30
INORGANIC
Sat., Sun., 9.30 - 10.30
Basic
Sat., Sun., 11.30 - 12.30

**மீண்டும் விடுதலைப் பெருவிழா**
கவலை, கண்ணீர், தீராத வியாதி, பிசாசின் பிடி,
பில்லி சூனியக்கட்டு,
பரம்பரைச் சாபங்களிலிருந்து
**இயேசு விடுதலை கொடுக்கிறார்**
இடம்: காளிகோயிலடி, மூளாய் வீதி, மூளாய்
காலம்: ஆவணி 24ஆம், 25ஆம், 26ஆம் திகதிகளில்
நேரம்: தினமும் மாலை 3 மணிக்கு
குறிப்பு: "அன்பான இயேசு ஜீவ கீதங்கள்"
பாடகர் சகோ.N. பத்மதேவா அவர்களின் விடுதலைக் கானங்கள் நிகழ்வும் நடைபெறும்.
விவரங்களுக்கு: நாற்சதுர சுவிசேஷ சபை,
முதலிகோயிலடி, மூளாய். (64059)

BBS இன்
A/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான குறுகிய கால ஆங்கில வகுப்புக்கள்
CERTIFICATE IN ENGLISH
DIPLOMA IN ENGLISH
IELTS
தவணை முறையில் கட்டணம் செலுத்தும் வசதி
பாடசாலைமாணவர்களுக்கான ஆங்கில வகுப்புக்கள்
Pre-Foundation · Foundation · Lower Intermediate · Intermediate · Upper Intermediate
BRITISH BUSINESS SCHOOL

**இலவசக்கணனிப்பயிற்சி**
ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அரச நிறுவனங்களை கணனி மயப்படுத்துவதில் பெரும்பங்காற்றிய எமது நிறுவனத்தின் விசேட கணனிப் பயிற்சித் திட்டம்.
MCS Supported By UNDP/JRRP
பதிவுகள் 27-08-2007 முன் நேரில்
324, பலாலிவீதி, யாழ்ப்பாணம்

**Jaffna College Institute of Technology**
**Vaddukoddai, Jaffna [ JCIT ]**
A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான தொழில்நுட்ப பாடநெறிகள்
மிகவும் குறைந்த கட்டணத்தில்....!
கூடிய வசதிகளுடன் .....!

| Course Name | Duration |
|---|---|
| 01.Diploma In Computer Programming & Data Processing | 01 Year |
| 02.Diploma In Civil Draughtsmanship | 01 Year |
| 03.Australian Computer Society | 02 Years |
| 04.Technician Diploma in Electronic & Telecommunication Engineering | 03 Years |
| 05.Technician Certificate in Electronic & Telecommunication Engineering | 01 Year |
| 06.Certificate in Microsoft Office | 03 Months |
| 07.Certificate in Computer Hardware | 03 Months |
| 08.Certificate in Printing Technology | 04 Months |
| 09.Certificate in Macro media Flash MX | 03 Months |
| 10.Certificate in Maya Fundamentals | 02 Months |
| 11.Certificate in C++ | 02 Months |
| 12.Certificate in Visual Basic | 02 Months |

வசதிகள்:
★ அமைதியான சூழல்
★ குளிரூட்டப்பட்ட கணனிச் செயல்முறை ஆய்வுகூடம், வகுப்பறை.
★ நூல் நிலையம்
★ சிற்றுண்டிச் சாலை
★ விளையாட்டுத் தளங்கள்
★ வரையறையற்ற செயல்முறை பயிற்சி வகுப்புகள்
பாடநெறிக்களுக்கான விண்ணப்பங்களை 3rd September 2007 முன்னதாக கையளிக்கவும்
மேலதிக விவரங்களுக்கு:
**Director, Jaffna College Institute of Technology, Vaddukoddai, Jaffna, Sri lanka.**
Tel.: 0602213139, E-mail : jcit@sltnet.lk

**A/L முடிகிறது ..... இனி?**
சிங்களம், ஆங்கிலம் படிப்போமா?
(அரச அலுவலர்களும் வேறு தொழில் புரிவோரும் சேரலாம்)
**வகுப்புகள் ஆரம்பம்:**
28.08.2007 நண்பகல் 12 மணி அோறி மையம், மருதடி ஒழுங்கை, சுதுமலை வடக்கு, மானிப்பாய். / 01.09.2007 நண்பகல் 12 மணி கற்பகம் கல்வி நிலையம், நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
**க. துரைராஜா,**
(இளைப்பாறிய மேலதிக அரச அதிபர்)

ஆரம்பம் 2008 A/L
27.08.2007 மு.ப. 6.30
(திங்கட்கிழமை)
கணக்கீடு - கம்பனி க/கு
தவா
2009 A/L - 25.08.2007
பி.ப. 3
பொருளியல் -
சந்தைப் பொருளாதாரம்
V.V.K. கரன் (B.B.A)
பெனின் கலா அக்கடமி
புங்கன்குளம்.

B.A. Final கருத்தரங்கு
தமிழ்
27.08.2007 - 9 a.m.
B.A. Part - I-
அரசறிவியல் ஆரம்பம்
27.08.2007 - 9 a.m.
* B.A. Final அனைத்துப் பாடங்களும் நடைபெறும்.
திகழ் கல்வி நிறுவனம்
கே.கே.எஸ். வீதி, இணுவில்.

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**
Diploma Courses...
* Computerized Accounting (Tally, Accpack, MYOB, QuickPro)
* MS Office *DTP *V.B., .net
* Hardware * Web Designing
* Vide Editing *AutoCAD *3D Designing
International Courses...
*MCP *MCSE *MCSA
*CCNA *CCNP *N+ *A+
Degree Course * BIT Semester 1,3 & 5
பதிவுகள் 27-08-2007 முன் நேரில்

324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
MGS Supported By UNDP/JRRP

**CALLING CARD**
உங்கள் இல்லங்களில் இருந்த வண்ணம் எந்தத் தொலைபேசிகளிலும் குறைந்த கட்டணத்தில் வெளிநாட்டு அழைப்பு களைப் பெற்றுக்கொள்ள.
T.P.: 021 222 7835
021 222 7310
5/=
(சி/53418)

**துரித தபால்கள், பொதிகள் சேவை**
உள்நாடு, வெளிநாடுகளுக்கு கடிதங்கள் அன்பளிப்புப் பொருள்கள் உணவுப் பொருள்கள் உடுபுடைவைகள் மற்றும் VDO பிரதிகள் CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்.
நீங்கள் குறிப்பிடும் எந்த முகவரியிலும் ஒப்படைக்கப்படும்
**திருமுருகன் கொம் நெற்**

259, கே.கே.எஸ். வீதி. யாழ்ப்பாணம். தொ.பே. 021 222 7835
46 ஆடியபாதம் வீதி. திருநெல்வேலி. தொ.பே. 021 222 7310

## மரண அறிவித்தல்கள்

### அருட் தந்தை P.M. இம்மானுவேல்

அருட் தந்தை P.M. இம்மானுவேல் அடிகளார் நேற்று (25.08.2007) சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு இறைபதமடைந்துவிட்டார்.

அன்னாரின் அடக்க சடங்குகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
செயலர், ஆயர் இல்லம்,
யாழ்ப்பாணம்.

### திருமதி இராமையா சிவயோகம் (குண்டுமணி)

இணுவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராமையா சிவயோகம் நேற்று (25.08.2007) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமையாவின் அன்பு மனைவியும் கங்காதரன் (வர்த்தகர்), சிறிதரன் (பிரான்ஸ்), லலிதா (ஜேர்மனி), பாஸ்கரன் (தவில் வித்துவான்), ஜெகதீஸ்வரன் (ஆசிரியர், கொக்குவில் இந்துக் கல்லூரி), கேதீஸ்வரன் (இந்தியா), செந்தில் செல்வன் (ரகு, பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.08.2007) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இணுவில் மேற்கு,
இணுவில்.

தகவல்
விஜிதன் (விஜி - பேரன்).

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26.08.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org